www.padippakam.com

கலைமாமணி - 1997

கலைப்பூபதி – 1995

கலைவேள் – 1994

கலைப்பணிச் செல்வர் - 1994

விவசாய மன்னன் - 1981

முகத்தார் – 1981

கலைமுரசு – 1980

ஜனாதிபதி விருது 1979



சிறப்பு மலர்
15.03.1998

# முகத்தார் எஸ். யேசுறட்ணம்

படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயிலில்..............

**கைகள் ஒன்றிணைந்து தட்டும் போதும்............**
**கரங்கள் அவனை நோக்கி (நீளும்) போதும்............**
**முகங்கள் மலர்ந்தபடி ...........**
**அவன் புகழ்பாடும் போதும்........**

ஒரு கலைஞனுக்கு இதைத் தவிர வேறென்ன வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஏதோ வகையில் ஒரு திறமை இருக்கும் என்பதும், அவனது வாழ்நிலைச் சூழ்நிலை அவனது திறமையை வெளிக்கொண்டு வரும், அல்லது வேறுதிசையில் திருப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும்.

அவனது திறமை நேர்கோட்டில் வெளிப்படுமாயின்....... அவனது புலமைகள் அவனது திறமைக்கு வழி வகுத்துவிடும். எத்தனை பேருக்கு இத்தகைய நிலை உண்டு.

எண்ணிப்பார்த்தால்...........வேடிக்கைதான்.......... தன்புலமையை வெளிவிட ஒரு கலைஞன் விரும்பினால் அவன் எத்தனையோ படிகளைத் தாண்டித்தான் வெளிவரவேண்டும்.

அத்தனையும் படிக்கற்களாக இருப்பின் அவனது உயர்வு நிச்சயமானது.

ஆனால் தடைக்கற்களாக இருப்பின் அவற்றைத் தாண்டினால் தான் அவனது உயர்வு நிச்சயமாகிறது.

ஒரு கலைஞன் மதிக்கப்படுவது அவசியம், அவனுக்கு முன்னால் தடைக்கோடுகள் இருக்கவே கூடாது.

ஒரு மாற்றத்துக்கு முன்னால் கலைஞன் இருப்பான். அந்த மாறுதலுக்கு அவனும் ஒரு காரணம். அவனது கலைச் சேவைகளில் படைப்புக்கள், விசயங்கள் கருவியாக மாறுகின்றன.

மாற்றமடையும் நாகரீகம், பண்பாடு, சமூக பொருளாதாரம், சட்டம், தேசவழமை இவைகளுக்குரிய தொடர்பாளனாக கலைஞன் இருப்பான்.

செய்திப் பரப்பாளனாக அன்று முதல் இன்று வரை கலைஞன் இருக்கிறான். இத்தகைய மாற்ற வளர்ச்சி திருப்பு முனைகளுக்கு உந்து சக்தியாக இருக்கும் கலைஞனும் அவனது படைப்புக்களும் பராட்டப்படவேண்டும்.

அந்தக் கலைஞன் வாழும் போதே தன் படைப்பின் பயன் - அதன் விளைவுகள் - அந்தப் படைப்பின் தரம் - அவனது கலைச்சேவை இவைபற்றி அந்தக் கலைஞன் நேரடியாகப் புரிந்தும் தெரிந்தும் கொள்வது அவசியம்.

தனது பயன்பாட்டின் எல்லை எதுவரை இருந்துள்ளது என்பதை ஒரு கலைஞன் வாழும்போதே தெரிந்து கொள்ளும் போதுதான் அவனது வாழ்வு நிலை கலைப்பயணத் தன்மையை எத்திசையில் திருப்பியும் - நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்பதைப் புரிந்து கொள்வதுடன் தனது அளவு கோலை வைத்துக் கொண்டு புதிய தேடலை அவனால் ஆரம்பிக்க முடியும்.

இந்த நிலையில் இன்று கலைமாமணி விருதினைப் பெறும் முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம் அவர்கள் உங்கள் முன் நிற்கின்றார்.

அவரைப் புரிந்து கொள்ளுங்கள்
அவரைத் தெரிந்து கொள்ளுங்கள்
அவரைப் புரிய வையுங்கள்
அதுவே அவர் விரும்புவதும்...

**மலர்க்குழு**



படிப்பகம்

www.padippakam.com

# விழாக்குழுத் தலைவரின் செய்தி

நிகழ்காலக் கலைஞன்.........

கலை என்றால் என்ன? என்ற கேள்விக்கு இலகுவில் யாராலும் விடை கூற முடியும். காரணம் இறைவன் படைப்புக்களாயினும், மனிதனின் படைப்புக்களாயினும் ஜீவராசிகளின் படைப்புக்களாயினும் ஏதோ ஒரு கலை வடிவத்தைப் பிரதிபலிக்கத்தக்கதாக செய்கின்றன. இதை மனிதன் அனுபவவாயிலாக அறிந்திருக்கின்றான் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

இறைவன் ஒரு சிறந்த கலைஞன். எனவே இந்த உலகமும் அதன் இயக்கமும் கலை வடிவத்திற்குள் அடங்கியுள்ளன என்று சுருக்கமாகக் கூறிவிட முடியும்.

மனித வரலாற்றில் கலை என்பது பல்வேறுபட்ட பரிமாணங்களில் வெகுவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இன்று எல்லோராலும் கணணிக் கலை பற்றிப் பேசுவதற்குக் காரணமும் இதுவே.

எந்தவொரு கலை வடிவமும், அதன் நிகழ் காலத்திலேயே போற்றப்படவேண்டும். வாழ்த்தப்படவேண்டும். அதோ போலத்தான் ஒரு கலைஞனும் அவன் வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்தன் கலைஞன் மன நிறைவு அடைகின்றான்.

இன்று புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழ் மக்கள் மத்தியில் எத்தனையோ அரும் பெரும் கலைஞர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் ஒரு சிலலே தொடர்ந்தும் இந்தப் புலம் பெயர்ந்த நாடுகளில் தம் கலை கலாச்சாரத்தை வளர்த்து வருகிறார்கள். இக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஜேர்மன் 'இரங்கும் இல்லம்' வருடா வருடம் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து 'கலைமாமணி' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி வருகிறார்கள். இந்த 'இரங்கும இல்லத்தின்' அரிய பணிக்கு எனது கோடி நன்றிகள், வாழ்த்துக்கள்.

கடந்த ஒரு சில மாதத்திற்கு முன்பு கலைஞர் யேசுறட்ணம் அவர்களுக்கு 'கலைமாமணி' பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளது இவ் இரங்கும் இல்லம்.

கலைஞர் யேசுறட்ணம் அவர்களோடு நான் இலங்கையில் இருந்த பொழுது அதிக தொடர்புகள் இருக்கவில்லை. ஒரு சில தடவைகள் நான் எனது தந்தையுடன் ஒப்பனை செய்வதற்காக கொழும்பிற்கு சென்ற பொழுது அங்கு கொழும்பு மேடைகளில் இவரைப் பார்த்திருக்கிறேன். இரண்டு தடவைகள் ஒப்பனைகூடச் செய்திருக்கிறேன். ஆனால் எனக்கு இவர்மேல் அதிக ஆர்வம் ஏற்பட்டது 'முகத்தார் வீடு' நாடகம் வானொலியில் கேட்ட பிற்பாடுதான். அந்த ஆர்வம் வலுக்கூடியது. 'வாடைக்காற்றில்' இவரின் நடிப்பால். இந்த அரிய பெரிய கலைஞரோடு சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற ஆதங்கம் அன்று எனக்கு ஏற்பட்டது. அன்று சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் இன்று இந்தப் பிரான்ஸ் மண்ணிலே அந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது மட்டுமல்ல, அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்துள்ளதை நினைத்து பூரிப்படைகிறேன்.

இவ்வரிய கலைஞரைப்பற்றி எழுதிக்கொண்டு போனால் ஒரு புத்தகமே எழுத முடியும். இவரைப்பற்றி நான் அறிந்து கொள்வதற்கு முன்பு எனது தந்தையார் அடிக்கடி இவரைப்பற்றி புகழ்ந்து கூறுவார். 'ஒரு சிறந்த குழந்தைக் கலைஞர்' என்றால் அது கலைஞர் யேசுறட்ணம் அவர்கள் தான்.

'கலைமாமணி' யேசுறட்ணம் அவர்கள் ஒரு செல்லக் குழந்தை. அதைவிட அவர் ஓர் அன்புக் குழந்தை. எல்லா அம்சங்களும் நிறைந்த ஒரு தமிழ்க் குழந்தை. மொத்தத்தில் ஓர் நிறைவான தமிழ் குழந்தை. இக் குழந்தைக் கலைஞரோடு நான் இங்கு பிரான்சில் வாழுகிறேன என்று பெருமிதமடைகிறேன்.

'கலைமாமணி' அவர்களே நீவிர் வாழி, உமது கலை வாழி, உமக்கு 'கலைமாமணி' ப் பட்டம் தந்த இரங்கும் இல்லம் என்றென்றும் வாழியவே.

அன்புடன்

**பெஞ்சமின் இம்மானுவல்.**


படிப்பகம்

www.padippakam.com

# தலைமை விருந்தினர் அவர்களின் செய்தி

தமிழீழப் போராட்டம் இன்று மையம் கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி எதிர்காலத்தில் அதியுன்னதமான ஆக்க இலக்கியங்களைப் படைத்து உச்சங்களை தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

வே. பிரபாகரன்
தலைவர் - தமிழீழ விடுதலைப் புலிகள்

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மூத்த கலைஞனாக திகழும் முகத்தார் யேசுறட்ணம் அவர்கட்கு கலைஞர்கள் எடுக்கும் பாராட்டுக் கௌரவிப்பு விழாவுக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

இன்று புலம் பெயர்ந்த நாடுகளில், கடினமான சமூக, பொருளாதார, சூழ்நிலைகளின் மத்தியில், படைப்புகளும் படைப்புக்களுக்கான வீச்சும் ஆரோக்கியமான விதத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

மூத்த கலைஞர்களை கௌரவிப்பது இவ்வாறான ஊக்குவிப்பு பணிக்கு வழிகோலுவதுடன் எமது கலைப் பண்பாட்டு படைப்பாற்றலை முழுவீச்சுடன் முன்னேற்றி நகர்த்த உதவும்.

இன்று எமது தாயகத்தின் போர்க்காலச் சூழ்நிலையில் ஒரு உயிர்ப்பான கலை பண்பாட்டுக் புரட்சி இடம் பெற்று வருகின்றது.

எமது தாயகத்தில் கவிதை முதல் சினிமா வரை இன்று 'தமிழீழப் படைப்புகள்' என பெருமையுடன் உரிமை கொண்டாடக் கூடிய வீச்சையும் தாக்கத்தையும் கொண்டு பல படைப்புக்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

மறுபுறம், புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இப்பரிமாணமும் முழுமையாக வெளிக்கொண்டு வரப்படவில்லை. எமது கலை இலக்கிய படைப்பாற்றல் சமூகத்தின் சமகாலப் பிரச்சனைகளையும் வினாக்களையும் மையமாகக் கொண்டு மக்களை சென்றடையும் படைப்புக்களாக வெளிக்கொண்டு வரப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் வேண்டுகோளும் ஆகும்.

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

ந. இளங்கோ
தமிழீழ விடுதலைப் புலிகள்
*11.03.1998*


படிப்பகம்

www.padippakam.com

# சிறப்பு விருந்தினர் அவர்களின் செய்தி

## தாய் மண்ணின் சேவை இங்கும்....

பேசும் மொழிக்கும், பிறந்த மண்ணுக்கும் பெருமை தேடித் தந்த நம்மவர்கள் போற்றிப் புகழப்படவேண்டியவர்கள். இவ்விதமானவர்களில் பலர் புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள் அங்கும் அவர்கள், தாய் மண்ணில் ஆற்றிய சேவையை தொடர்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் பணி நெஞ்சாரப் பாராட்டப்படவேண்டியவை. இதனையெல்லாம் மனதில் கொண்டே 'இரங்கும் இல்லம்' அமைப்பை ஆரம்பித்து, ஐரோப்பிய நாடுகளில் வாழும் நமது கலைஞர்களை வாழும்போதே கெளரவிக்க வேண்டுமென்று விரும்பினேன். எனது எண்ணங்களுக்கு ஆதாரமாக அமைந்தவர், என் நெஞ்சுக்கு நெருக்கமான நண்பர், 'ஈழநாடு' பிரதம ஆசிரியர் எஸ்.எஸ். குகநாதன். தமிழ் வானொலி, தமிழ் தொலைக்காட்சி என்று பெரிய பொறுப்புக்களையெல்லாம் இன்று அவர் சுமந்து கொண்டிருந்தாலும், எனது எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அவர் ஒருபோதும் பின்னின்றதில்லை.

ஒருவர் வாழும்போது அவரை மதிக்காது, அவர் மறைந்த பின்னர் சிலை அமைப்பதும், திருவுருவப் படத்தை திறந்து வைப்பதும், புகழ் அஞ்சலி செலுத்துவதும், புகழ் பாடுவதும் பொய்யன்றோ! அதனால்தான், எமது 'இரங்கும் இல்லம்' அமைப்பு, 'ஈழநாடு' பத்திரிகையுடன் இணைந்து வருடாவருடம் ஐரோப்பாவில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருதை வழங்கிவருகிறது. இவ்வாண்டு ஜேர்மனி சோசெற் நகரில் நடந்த விழாவில் பாரிஸில் வாழும் நாடகக் கலைஞர் 'முகத்தார்' யேசுறட்ணம் அவர்களுக்கும், லண்டனில் வாழும் இசைக் கலைஞர் மாதினி சிறீஸ்கந்தராசா அவர்களுக்கும் 'கலைமாமணி' விருது வழங்கிக் கெளரவித்தோம்.

அப்படி பட்டம் வழங்கிக் கெளரவிக்கப்பட்டவர்களில் ஒருவரான 'முகத்தார்' யேசுறட்ணம் அவர்களை, 'கலைமாமணி' விருது பெற்றமைக்காக பாரிஸ் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து கெளரவித்து அவர் புகழ் பாட விழா நடத்துவது பெருமையாக இருக்கிறது. மகிழ்ச்சியைத் தருகிறது.

'முகத்தார் யேசுறட்ணம்' தமிழீழ மக்கள் நன்கறிந்த நல்ல நாடகக் கலைஞர். இலங்கை வானொலி மூலம் அவர் தமிழ் நாடக உலகுக்கு அறிமுகமாகி, தன் கலைத் திறனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். அவர் நல்ல நடிகர். நல்ல நாடக ஆசிரியர். நல்ல நாடக இயக்குனர். அவர் நடிப்பு சிந்திக்க வைத்துச் சிரிக்க வைக்கும். சில நேரங்களில் கண்ணீரைக் கூட வரவழைக்கும் சக்தி கொண்டது. அவரை இன்று விழா எடுத்துக் கெளரவிப்பது சாலவும் பொருத்தமாகும். அந்த நல்ல தமிழ்க் கலைஞர் 'முகத்தாரை"யும் அவருக்கு விழா எடுத்துக் கெளரவிக்கும் பாரிஸ் கலைஞர்களையும் இதயத்தால் வாழ்த்துகிறேன்.

இன்று பாரிஸில் கெளரவிக்கப்படும் 'முகத்தார்' நீடூழி வாழ வாழ்த்துகிறேன்

**சிவனடியான் ஸ்ரீபதி**
இரங்கும் இல்லம்
பிராங்பேட்
ஜேர்மனி


படிப்பகம்

www.padippakam.com

# 'கலைஞர்களுக்கு ஓர் உதாரண புருஷன்'

## 'சிரிப்பைக் கொண்டு செய்த உதடு சிரித்துக் கொண்டே இருந்தது கலைஞனே'

முகத்தார் எஸ். யேசுரட்ணம் அவர்களின் உதடு மட்டுமா சிரிக்கின்றது. வதனமே சிரிப்பின் வெளிப்பில்தான். நிலைமையோ சமுதாயச் சீர்கேடுகளை அழுத்தம் திருத்தமாக நகைச்சுவை வசனங்களால் சிரிக்கவும், சிந்திக்கவும் வைப்பதில் சிறந்தாற்றல் கொண்ட மன்னன்தான். கலைஞன் உள்ளம் நல்லதைத்தான் நாடுகின்றது. நல்லதைத்தான் சிந்திக்கின்றது. நமக்குரைக்கின்றது. தன்னலம் மேவிய இழிசெயல்களை கலைஞன் தன்னுள் மூட்டிய தீயெனக் கொண்டு எம்மைச் சுட்டெரிக்கின்றான். சமுதாய உணர்வே மூச்செனக் கொண்டு உயர்வான தத்துவங்களைத் தருகின்றான். இந்தவகையில் முகத்தாரின் கலைச்சேவை பெரும்பேறானது. கலைஞர்களுக்கும் வழிகாட்டியாக, நல்லவராய், இனியவராய், சிரிப்பின் சிறப்புறு 'ஔடகமாய்' மக்களோடு பழகுவதில் எளிமையும், தாழ்மையும், அடக்கமுமான சாந்தமானவராகத் திகழ்கின்றார். இந்தப் பிரான்சு மண்ணில் முகத்தார் வந்து அடைக்கலம் புகுந்தவேளையில் நான் கேட்டபோதெல்லாம் பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் நடத்திய விழாக்களில் தனது பங்களிப்பை எந்தவித மனக்கசப்பும், காழ்ப்புணர்ச்சியும் இல்லாது முகமலர்வோடு நிகழ்த்திப் பெருமை சேர்த்ததை என்னால் மறக்க முடியாது.

'எழுத்தாளன் ஒருவன் தன்னுடைய இலட்சியத்தில் முழுவெற்றி பெறவேண்டுமானால் அவன் சிறந்த 'நாடக்க கலைஞன்' என்னும் இடத்தைப் பெறவேண்டும் என்கின்றார் அவ்வை தி. க. சண்முகம். இச்சிறந்த கூற்றுக்கிணங்க முகத்தாரின் நாடக பாணிகள் இலட்சியத்தின் வெற்றியின் சாதனையாகவே நிமிர்கின்றது. 1966களில் தொடங்கி 1985 வரையும் (1985 நாட்டைவிட்டு தமிழகத்தில் தஞ்சம்) இலங்கை வானொலியையும், ரசிகர்களையும் செவிப்புலன் வழியான நாடக பாணியால் ஆட்கொண்ட மன்னனாகவே வலம் வந்துள்ளார். 'முகத்தார் வீடு' ஐந்தரை வருடங்கள் தொடர்ந்து ஒலித்ததும் 'பருவக்காற்று' ஐம்பத்தியிரண்டு வாரங்கள் முழங்கியதும் 'சண்டியன் சின்னத்தம்பி'யின் சீர்திருத்தச் சிந்திப்பில் மக்கள் மனம் மகிழ்ந்ததையும்.... இன்னும் எத்தனை நாடகங்கள் சினிமாக்கள் மூலம் புகழ் கொடிகட்டிப் பறந்ததை நினைக்க - நினைக்க பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்போற்றுதலுக்குரிய கலைஞனைச் சேர்ந்த 'கலைமாமணி'ப் பட்டமும் வரவேற்புக்குரியதே. கலைஞன் வாழும்போது வாழ்த்தப்படவேண்டிய கட்டாயக் கடமையேயாகும். இந்தவிடத்தில் இப்பட்டம் அளித்த 'தமிழ்க் கலைஞர் அறக்கட்டளை' நிர்வாகத்திற்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதே.

'ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன்
நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு' (குறள் 161)

ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை கொள்ளாத இயல்பைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழவேண்டும். இத்தகைய உயர்ந்த பண்புநிலை 'முகத்தாரிடம்' கலைஞனுக்குரிய சிறப்போடு திகழ்கின்றது அறிந்து மகிழ்வோடு அவர் கலைப்பணி தொடர்ந்து சிறந்தோங்க வாழ்த்துகிறேன்.

வாழ்க கலைமாமணி 'முகத்தார்' அவர்களே!

**அதிபர் சி. காரளபிள்ளை**
*பாரிஸ் தமிழர் கல்வி நிலைய ஸ்தாபகக் காப்பாளர்*


படிப்பகம்

www.padippakam.com

தமிழ் ஒளி
தமிழ் ஒலி

TAMIL OLI (T.V)
TAMIL OLI (Radio)

**RADIO ASIA S.A.**
EUROPE'S PIONEER BROADCASTERS IN TAMIL RADIO & TAMIL TELEVISION

விருதுகள் கிடைப்பதால்
சிலருக்குப் பெருமை
ஆனால்
முகத்தாருக்கு விருது வழங்கியதால்
விருது பெருமை பெற்றிருக்கிறது
எமது விருதுக்கு பெருமை சேர்த்த
முகத்தாருக்கு,
விழா எடுப்பது மகிழ்வைத் தருகிறது.
வாழ்த்துக்கள்

**எஸ். எஸ். குகநாதன்**


படிப்பகம்

www.padippakam.com

ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE ST. HENRI D'ILAVALAI - EN FRAN(

யா/இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

OLD STUDENTS ASSOCIATION OF ST. HENRY'S COLLEGE ILAVALAI - FRANCE

*Regd. N°: 141223 811*

# மக்கள் மனம்தனில் தனி இடம் பிடித்துக் கொண்ட எம் மக்கள் கலைஞனை மனமாரப் பாராட்டுவோம்

மக்கள் மனங்களில் தம் கலைத் திறமையினால் பதிந்து விட்ட பல கலைஞர்கள் நம்மிடையே உண்டு. ஆயினும் கலையை பணவரவின் நோக்கிற்காக மட்டும் அன்றி தம் உயரிய கலைக் குறிக்கோளை அடையவேண்டும் என்று உழைத்து மக்கள் மனம்தனில் தனிஇடம் பிடித்துக்கொண்ட மக்கள் கலைஞர்கள் ஓர் சிலரே நம்மிடையே.

அவ்வழியில் இன்றைய விழா நாயகனும் மக்கள் கலைஞனுமாகிய எம் கிராமத்தவனும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரெஞ்சுக் கிளையின் தலைவனுமாகிய கலைமாமணி முகத்தார் திரு.எஸ். யேசுறட்ணத்தை இன்றைய இவ்விழா மூலம் நினைவுகூர முயல்கிறோம்.

அகில இலங்கை ரீதியாக பல திறமைமிக்க கலைஞர்களை உருவாக்கிய பெருமைமிக்க கல்லூரி இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி.

அவ்வழியில் தனது கல்லூரிப் பிராயத்திலே 1949ம் ஆண்டு கலைத்துறைக்குள் புகுந்து கொண்ட முகத்தார் இலங்கையில் தயாரிக்கப்பட்ட வாடைக்காற்று, கோமாளிகள், ஏமாளிகள் போன்ற திரைப்படங்களில் தனது முத்திரையை பதித்ததோடு மாத்திரமல்லாமல் இலங்கை வானொலி நிகழ்ச்சியிலேயே சரித்திரம் படைத்துவிட்ட தொடர் நாடகமான 'முகத்தார் வீடு' ஐந்தரை வருடங்கள் எழுதி, இயக்கி, நடித்து ஓர் சாதனையை அந்நாளில் படைத்தவர்.

ஞாயிறு தினங்கள் என்றால் வானொலி முன் சிறார்கள் முதற்கொண்டு குடு குடு கிழவரும் உட்கார்ந்து கேட்டு இரசித்து மகிழும் நூற்றுக்கு மேற்பட்ட கதம்ப நிகழ்ச்சிகளை நகைச்சுவையுடனும், கிராமத்து மணம் கமழும் பேச்சுடனும் வழங்கியவர்.

இதைவிட 79ம் ஆண்டு ஜனாதிபதியின் நடிப்பாற்றலுக்கான விருதினையும் அவர் தனதாக்கிக் கொண்டதனையும் மறந்துவிட முடியுமா? இது மட்டுமா? 1993 தமிழ் நாட்டின் திருச்சியில் 'முத்தமிழ் காவலர்' கி.ஆ.பெ. விசுவநாதம் முன்னிலையில் 'கலைப்பணிச் செல்வர்' என்ற பட்டம் வழங்கப்பட்டதனையும் மறந்துவிடமுடியுமா?

கால ஓட்டத்தின் சுழற்சியால் இன்று புலம் பெயர்ந்த நிலையினிலும் ஐரோப்பிய நாடுகளில் தயாரிப்பான எம்மவர்களின் பல திரைப்படங்களிலும், ஐரோப்பிய தமிழ் வான் அலைகளின் ஊடாகவும், ஐரோப்பிய முழுவதிலும் பல மேடை நாடகங்களை எழுதி இயக்கி நடித்தும் மக்கள் மனங்களில் சிரிப்பையும் அதனூடு சிந்தனையையும் வழங்கி வருபவர்.

அதுமட்டுமல்ல இன்று எமது பிரான்ஸ் கிளை பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக 5 ஆண்டுகள் மட்டுமல்ல கலைத்துறையின் பொறுப்பாளராகவும் ஹென்றி அரசர் கல்லூரியின் கலைஞர்கள் உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும் தமது கலைத்திறனை மணம் கமழ விடுபவர்கள் என்ற சொல்லிற்கு வடிவம் கொடுத்தவர்.



படிப்பகம்

www.padippakam.com

கொடுவாள் மீசையுடன் அவரைக் கண்டாலே சிறுவர் முதல் இளைஞர்கட்கும் சற்றுப் பயம் வந்துவிடுவது இயல்புதான். ஆயினும் அவரது குழந்தை மனதைப் புரிந்தவர்கள் கூட அதை அளவிட்டதே கிடையாது

மரணத்தின் விளிம்பிற்கு சென்று மீண்ட செம்மல் அவர். இத்தள்ளாடும் வயதினிலும் கூட மேடையில் அவர் ஏறிவிட்டால் மக்களை வயிறு குலுங்கச் செய்யாமல் அவர் இறங்கியதே கிடையாது.

எம்மைப் பொறுத்தவரை கலையுலகில் அவன் இன்னும் ஓர் துடிப்புள்ள இளைஞனே.

எம் கலைஞனுக்கான இவ்விழா மூலம் கலைமாமணியாக உயர்ந்துள்ள முகத்தார் திரு. எஸ். யேசுறட்ணத்தை பாராட்டுவதில் எமது கிராமத்து மக்களுடன் இணைந்து எமது கழகமும் பெருமை அடைகிறது.

இக்கலை மாமணியின் கலைச்சேவை மேலும் பற்பல ஆண்டுகள் எம் மக்களுக்கு கிடைக்கவேண்டுமென அவர் கலைத்துறையில் காலடி எடுத்துவைத்த அதே புனித ஹென்றி அரசர் ஊடாக வேண்டி நிற்கின்றோம்.

**ஜஸ்ரின் சந்திரமோகன்**
செயலர்
இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை



**இலங்கையில் தயாராகி வெளிவந்து திரைப்பட ரசிகர்களின் இதயம் கவர்ந்த 'வாடைக்காற்று' திரைப்படத்தில் கே. எஸ். பாலச்சந்திரனும், எஸ். ஜேசுரத்தினமும் தோன்றும் ஒரு காட்சி.**



படிப்பகம்

www.padippakam.com

# CENTRE CULTUREL EURO-TAMOUL
# ஐரோப்பா தமிழ்க் கலையகம்
# EURO - TAMIL ART CENTRE

ASSOCIATION REGIE PAR LA LOI DE 1901

FRANCE - SWITZERLAND - GERMANY - UNITED KINGDOM - HOLLAND - ITALY - DENMARK - NORWAY

தாயக மண்ணிலே. வீட்டு முற்றத்தில் மக்களைக் கூடியிருக்க வைத்து. அவர்களைக் கும்மாளம் போட்டு சிரிக் வைத்தவர். ஏன் சிந்திக்கவும் வைத்தவர். சமூக சீர் கேடுகளை வானொலி நாடகங்களினூடாக வெளிக்கொணர்ந்தவர். இலங்கை வானொலியில் யாருமே செய்திராத சாதணையை செய்தவர். ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக "முகத்தார் வீடு" இன்னும் கூட இலங்கை வானொலியில் மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டு வருகிறது. இதனை அறியும் போது உண்மையிலேயே பிரமிப்பாக இருக்கிறது.

இலங்கையில் தயாரிக்கப்பட்டு வெளிவந்த "வாடைக்காற்று" திரைப்படத்திலே நடித்து, அன்று ஜனாதிபதி விருதைப் பெற்றுக் கொண்டவர், மேடைநாடகங்கள் பல, அவர் இலங்கையில் மூலை முடுக்கெல்லாம் மேடையேறினார். ஈழத்தின் பழம் பெரும் கலைஞர்களுடனும், இளம் கலைஞர்களுடனும் இணைந்து நடித்தவர், புகழீட்டியவர். இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் அங்கும் கலைப்பணியாற்றினார் மறைந்த தமிழ் அறிஞர் கி.ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களிடம் நேரடியாகவே பாராட்டுப் பெற்றவர். இந்தியாவில் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கபட்டவர்.

புலம் பெயர்ந்து ஐரோப்பா வந்து, பிரான்ஸிலே வாழ்ந்து வரும் இக் காலகட்டத்தில் கூட அவர், தனது கலைத்துறையிலிருந்து ஓய்ந்திராமல், தொடர்ந்து உழைத்துக்கொண்டிருப்பவர். பிரான்ஸ். ஜேர்மனி,ஈ ஹொலண்ட், சுவிற்சலாந்து, லண்டன் என எங்கும் சென்று அங்கே கலையரங்க மேடைகளை களை கட்டச் செய்பவர் "முகத்தார்" எஸ். ஜேசுறட்ணம் அவர்கள்.

பிரான்ஸில் தயாரான சத்திய கீதை "இன்னும் ஒரு பெண்", "முகம்", "புயல்", "ராஜாவின் ராகங்கள்" அவரே திரைக்கதை எழுதிய "முகத்தார் வீடு" போன்ற சின்னத்திரைப் படங்களில் நடித்து, அவற்றின் தனக்கென ஒரு தனிமுத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

எங்கள் அன்புக் கலைஞர், எல்லோருடனும் இனிமையாகப் பழகும் "முகத்தார் வீடு" எஸ். ஜேசுறட்ணம் அவர்களுக்கு 'கலைமாமணி" விருது கிடைத்ததையிட்டு ஆனந்த மடைகிறேன். வாழும் போதே கலைஞர்கள் வாழ்த்தப்பட வேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்டவன் என்ற வகையில், இன்று அவருக்கு எடுக்கப்படும் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்து கொண்ட என் கலைத்துறை நண்பர்களைப் பாராட்டிக்கொள்கின்றேன். இன்று விழாக்காணும் "முகத்தார்" எஸ். ஜேசுறட்ணம் அவர்கள் மென் மேலும் ஈழத்துக் கலையுலகில் இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என வாழ்த்திக் கொள்கின்றேன்.

**எஸ்.கே.ராஜன்.**
இயக்குனர்
ஐரோப்பா தமிழ் கலையகம்



படிப்பகம்

www.padippakam.com

ஈழநாடு

THE EELANADU
Tamil Weekly

# இவர் யாருக்கும் சளைத்தவரல்ல ...

பல்வேறு கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் முகம் கொடுத்து புலம் பெயர்ந்த மண்ணின் அவல வாழ்வுக்கு மத்தியிலும் நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்று பல துறைகளிலும் முத்திரை பதித்துவரும் எம்மவர்கள் வரலாற்றின் சில பக்கங்கள் இவை.

மாமேதைகளும், விற்பன்னர்களும், அற்புதமான கலைஞர்களும் நிறைந்த இந்தப் புலம் பெயர்ந்த மண்ணில் ஒரு சிலரையாவது தேடிப் பிடித்து வாழ்த்தும் பணியில் ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் சேர்ந்து கொண்டதில் பெருமை கொள்கிறோம்.

'வாழும் போதே கலைஞர்களை வாழ்த்துவோம்' என்ற ஈழநாடு இயக்குனர்களில் ஒருவரும் எனது அருமை நண்பருமான திரு. ஸ்ரீபதி அவர்களது நல்ல உள்ளமும், நம்மவர்களுக்கு நாமே மகுடம் சூட்டுவோம் என்ற துடிப்பான எண்ணங்கள் கொண்ட எனது உடன்பிறவா சகோதரனுமான ஈழநாடு ஆசிரியர் திரு. குகநாதன் அவர்களது விடா முயற்சியுமாகும்.

'கலைமாணி' விருதாக எம்மவர்களில் சிலரையாவது வருடா வரும் கௌரவிக்கின்றது. இந்த வகையில் 1997ம் ஆண்டின் கலைமாமணி விருது பெறும் முகத்தார் எஸ். யேசுறட்ணம் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். இந்த கலைமாமணி விருதும், எமது வாழ்த்துக்களும் மென்மேலும் பல முத்திரைகள் பதிப்பதற்கான அச்சாரம் மட்டுமே. தொடர்ந்து செல்லுங்கள். வாழ்த்துக்களும் விருதுகளும் உங்களைத் தொடர்ந்து வரும்.

**சி. பாலச்சந்திரன்**
நிர்வாக இயக்குனர்
ஈழநாடு



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞன் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும்

ஜேர்மனியில் இரங்கும் இல்லமும் பாரீசில் ஈழநாடு பத்திரிகையும் இணைந்து வருடா வருடம் பல திறமை மிக்க கலைஞர்களுக்கு கலைமாமணிப்பட்டம் வழங்கி வருகிறது. இந்த வரிசையில் சமீபத்தில் ஜேர்மன் நகரில் கலைமாமணி விருது வழங்கி கௌரவிக்கப் பட்ட என் சமகாலக் கலைஞன். இலங்கை வானொலி. மேடை. திரைப்படம் தொலைக்காட்சியென சகல துறைகளிலும் தனது பங்களிப்பை வழங்கி சாதனை படைத்த ஒரு இனிய கலைஞன் முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் கலைமாமணி விருது பெற்றும். இந்தக் கலைமாமணி விருதை வழங்கிய. நிர்வாகிகள் திரு. எஸ்.குகநாதன். திரு. சிவனடியான். சிறீபதி அவர்கள். இந்த விருதை அவரது சமகாலக் கலைஞனாகிய என்னைக் கொண்டு வழங்கியமைக்காக முதற்கண். என் தாழ்மையான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளையில். பாரீஸின் முன்னனித் தமிழ் கலைஞர்களும் நண்பர்களும் இணைந்து கலைமாமணி விருது பெற்று முகத்தாருக்கு ஏற்பாடாயிருக்கும் பாராட்டு விழாவில் ஒரு வாழ்த்து செய்தி தரும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்காக. அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

என் இனிய நண்பன் முகத்தாரைப் பற்றி எழுதுவதற்க்கு. என்னிடம் நிறைய ஆதாரங்கள் உண்டு இலங்கை அரசாங்கத்தில் பல உயர்பதவிகளை வகித்த நண்பன் யேசுரத்தினம். 1966களில். இலங்கை வானொலியில் நாடகம், பிரதி எழுதுதல் போன்ற பயிற்ச்சிப் பகுதியில் இணைந்து கொண்டார். அந்த இனிய உள்ளத்தின் உறவு 1968ம் ஆண்டு இலங்கை வானொலியில் நான் நடிகனாகத் தெரிவுசெய்யப்பட்ட போது கிடைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அன்றிலிருந்து இன்றுவரை அவர் என் பாசத்துக்குரிய கலைஞர், நாடகம் நடிப்பதோடு. பிரதிகள் எழுதி- கதம்பம். மத்தாப்பு. "கிராமசஞ்சினர்" என்று பல துறைகளில் காலடி எடுத்து வைத்த இந்தக் கலைஞன் "முகத்தார் வீடு" என்று ஒரு தொடர் நாடகத்தைப் பல வருடங்களாக வானொலியில் பிரதி எழுதி பங்கு கொண்டு சாதனை படைத்தார். இதனால் முகத்தார் என சிறப்புப் பெயரும் இவரோடு ஒட்டிக்கொண்டது. வானொலியோடு மட்டும் இவரது பங்களிப்பு நின்று விடவில்லை என்னோடு பலமேடை நாடகங்களில் நடித்திருக்கும் இந்த மாபெரும் கலைஞர் நான் பங்கேற்று நடித்து இலங்கையில் தயாரிக்கப்பட்டு சாதனை படைத்த "கோமாளிகள்", "ஏமாளிகள்" என்ற திரைப்படங்களிலும் தனது பங்களிப்பைச் செய்திருப்பது குறிப்பிடதக்கது. முக்கியமாக, இவர் நடித்த "வாடைக்காற்று" திரைப்படத்தில் சிறந்த நடிகருக்கான பரிசை அந்தநாள் ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்டதை நினைத்துப் பெருமையடைகிறேன்.

இந்த முகத்தார், உடலளவில் பெருத்திருந்தாலும், இவர் உள்ளம் ஒரு சின்னக் குழந்தைக்குரியது, சிறியவர் பெரியவர் என்ற வயது வித்தியாசம் இல்லாமல், எவரையுமே தூக்கி எறிந்து பேசாத ஒரு உன்னதக்கலைஞர். பல இளம் கலைஞர்களை இவர் தன் வாரிசுகளாக உருவாக்கியிருக்கிறார். எவருக்கு இந்த கலைஞனின் சேவை தேவைப்படுகிறதோ? அவருக்குள் தன் பங்களிப்பை தருவதாக வாக்களித்து விட்டால். பின்பு எந்தக் குறுக்கீடுகள் வந்தாலும். அந்த முடிவிலிருந்து தளம்பாத இந்தப் பிறவிக்கலைஞனுக்கு. ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய. கலைத்துணிவும். கலைப்பணிவும் நிறைய இருக்கிறது. இந்தக் கோட்பாடோடு கலை உலகிலும். வெளி உலகிலும் வாழ்ந்து காட்டியதால் தான் இன்று அபிப்பிராயபேதமின்றி. தன் சககலைஞர்களாலும், நண்பர்களாலும், இரசிகர்களாலும் பாராட்டுப்பெற்று உயர்ந்து நிற்கிறார்.

எவருக்கு இந்த கலைமாமணி விருது வழங்கப்பட்டிருக்கிறது? வாழ்க்கையிலும் சரி. உத்தியோகத்திலும் சரி. நெறிமுறையோடு வாழ்ந்துகாட்டிய இந்த முகத்தார் என்ற கலைஞனுக்குத்தான் கொஞ்ச காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த இந்தக் கலைஞர். மரணத்தோடு போராடி மறுவாழ்வு பெற்று இன்னும் தன் கலைச்சேவையை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆச்சரியமாக இல்லையா? இறைவனுக்கே இவர் கலைத்துறைக்கு இன்னும் சேவையாற்ற வேண்டியவர் என்ற எண்ணம் வந்துவிட்டதனால் எங்களோடு மீண்டும் இந்த அளப்பரிய கலைஞனை உலாவிட்டிருக்கின்றார்.

கலைஞன் பொதுச்சொத்து, என்பதிலும், கலைஞனுக்குக் கட்டுபாடுகள் இருக்கக்கூடாது என்பதிலும். ஆணித்தரமான நம்பிக்கை கொண்டவர் இந்த முகத்தார்.

சில்லறைத்தனமான விமர்சனங்களுக்குச் செவிகொடுக்காதவர் இவர். ஒருநாள் ஒலிவாங்கிக்கு பக்கத்தில் நின்றவர் தன்னை அறிவிப்பாளர் என்றும். கத்துக்குட்டிகள் சிலர் கலையின் பங்களிப்புத் தங்களதே என்று பெருமைப் பட்டுக்கொண்டு, திறமைசாலிகள் ஆக்கங்களில் ஜீவனைத்தேடி அலையும் இந்த நேரத்தில், அமைதியாக, அழகாக, நாசூக்காக, தனக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் தன்னடக்கமாக தன் கருத்துகளை நாடக வடிவில் மக்களைச் சென்றடைய வைத்த இந்த அற்புதக் கலைஞனுக்கு எல்லா வழிகளிலுமே இந்தக் கலைமாமணி விருது சாலப் பொருத்தமானது. என்பது என் கருத்து எல்லோர் கருத்தும் இதுவாகவேயிருக்கும்.

1983ம் ஆண்டு, இனக்கலவரங்களினால், பிரிந்து விட்ட நாம், மீண்டும் இணைந்து புலம் பெயர்ந்த நாட்டிலும் 1997தைத்திருநாளிலிருந்து ஆரம்பிக்க பட்டிருக்கும் றேடியோ ஆசியாவின் TRT யின் தமிழ் ஒலியில் கலைச்சேவை புரிந்து வருவதில் பெருமையடைகிறேன்.

இந்தக் கலைமாமணி விருது பெற்றிருக்கும் முகத்தார் எஸ.யேசுறட்ணத்தை பாராட்டும் முகமாக ஏற்பாடுகளைச் செய்த அன்பு உள்ளங்கள் யாவரையும் வாழ்த்துவதோடு என் இனிய நண்பன் முகத்தார் பல்லாண்டு வாழ்ந்து தன் கலை வாரிசுகளாக பல சிறந்த கலைஞர்களை உருவாக்கித் தரவேண்டுமென்று வேண்டி வாழும் போதே கௌரவிக்கப்படும் இந்த கலைஞனை வாழ்த்தி விடைபெறும்.

**அப்புக்குட்டி T. ராஜகோபால்.**


படிப்பகம்

www.padippakam.com

# என்னுள் ஒரு வாத்தியார்

எனக்கு கலைபற்றி வாதிடும் அறிவு இல்லை. கலைஞனைப் பற்றி சொல்லும் அறிவும் இல்லை.. இருந்தும் நான் கலை உலகில் திரைப்படமூலம் நுழைக்கப்பட்டேன்.

நுழைக்கப்பட்ட போது நான் சந்தித்த திறமையான நடிகர் என்றால் அது இந்த முகத்தார் வாத்தியார்தான். அவரது அரவணைப்பு என்னுள் நுழைந்தது. அதனால் 'புயல்' படத்தில் நடிக்க எனக்கு விருப்பம் ஏற்பட்டது. எனக்கு கலையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்திய கலைஞர் என்றால் அது முகத்தார் வாத்தியார்தான்.

அவரது மீசை எனக்குப் பிடிக்கும். அவரைத் தாத்தா என்றழைக்கப் பிடிக்கும். இன்னும் வாத்தியார் என்றழைக்க அதிகம் பிடிக்கும். இத்தகைய பிடிப்புகளுக்கு அதிக காரணம் என்னுடையதும் முகத்தார் தாத்தாவினதும் பாத்திரப் படைப்பின் தன்மையால் இருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எப்படி எண்ணினாலும் அவருடன் நடிக்கும்போது அவரது அங்க அசைவுகள், வசனத்தை வெளியிடும்போது ஏற்படும் தொனியின் தன்மை, முகபாவ மாற்றங்கள் இவைகள் என்னுள் பல கேள்விகளை எழுப்பின.

கதைத்துக் கொண்டிருக்கும்போது சிரிப்பதற்கு எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார் திடீரென நடிக்க வந்தவுடன் தன்னை மாற்றிக் கொள்வார். இது எப்படி? எனக்கு வியப்புத்தான். அவரைப் பார்த்து நானும் நடிக்க முயன்றேன்.

அந்த எனது வாத்தியாருக்கு விருது ஒன்று புதிதாக வழங்கியுள்ளதை அறிகிறேன். அந்த விருது தலைசிறந்த கலைஞர்களுக்கு வழங்குவதாக நம் பலர் கதையில் இருந்து அறிகிறேன். வெளிநாடுகளில் நல்ல கலைஞர்களும், எழுத்தாளர்களும் ஏன் ஒவ்வொரு துறையிலும் உள்ள சிறந்தவர்களைக் கௌரவித்து சிறப்பிப்பது வழக்கம் என்பதை எனது பள்ளிக்கூடத்தில் இருந்து படித்துள்ளேன்.

எம் இனத்தவர்கள் வெளிநாட்டில் தடுமாற்றமான வாழ்வை வாழ்வதையும் நான் அறிவேன். அவர்களுள் சிறந்தவர்கள், திறமையானவர்கள் இருப்பார்கள் என்பதில் எனக்கு அதிக நம்பிக்கை. அவர்களை இளஞ் சந்ததியினராகிய நாம் அறிந்து கொள்வது மிகமிக அவசியம் என நான் கருதுகிறேன்.

எனக்குக் கூட அதிகம்பேரைத் தெரியாது. ஒரு சிலரைத்தான் தெரியும். மற்றவர்களையும் தெரிந்துகொள்ள எனக்கு அதிக ஆவல் உண்டு. அப்படி எனக்குத் தெரிந்தவரை 'கலைமாமணி' விருது கொடுத்து பாராட்டுவது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த விருது மட்டுமல்ல இதிலும் மேலான விருது ஒன்று இருக்குமாயின் அந்த விருதை என் வாத்தியார் முகத்தார் தாத்தாவுக்கு கொடுத்து கௌரவிக்குமாறு வேண்டுகிறேன்.

அவர் கால் தொட்டு வணங்குகிறேன்.

மாணவன் குணா
**பொன். இளங்கீரன்**


படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழக் கலைஞர் ஒன்றியம் - பிரான்ஸ்

## தென்றல் சொல்லும் கலை.. இவர் கலை...

அண்ணனின் நாடகங்களை வானொலியில் கேட்கும்போது 'தென்றல் காற்றில் தமிழ் சொல்லிக்கொடுப்பதைப் போல் இருக்கும்' அதை மேடையில் பார்க்கும் போது "பூக்கடைகள் எல்லாம் நந்தவனமாக காட்சியளிப்பது போல் இருக்கும்".

காலம் எங்கோ புரண்டு எப்படியோ தூக்கிவந்து இவரை இன்று பாரிஸ் மண்ணில் உலவவிட்டபோதும் வெளிச்சத்தைப் புதைக்கமுடியாது என்ற விபரத்தைப் பிரகடணப்படுத்தி இருக்கிறார் எனது அருமை அண்ணர் ஜேசுறட்ணம்.

அண்ணன் விவசாய மன்னன் என்ற பட்டத்தைச் சுமந்திருக்கின்றார். எப்படி? இதமான எங்கள் தமிழீழ தமிழை தரமான கலைக்கு உரமாக்கும் உயர்வான தோட்டக்காரனைப்போல் அண்ணனும் கலைப்பயிர் வளர்த்தற்க்காக கூட இருக்கலாம்.

எங்கள் மத்தியில் பல கலைஞர்கள்.............. பாரிஸிற்குள் ஓர் வலம் வந்தால் குறைந்தது 10 கலைஞர்களையாவது சந்திப்போம். சிலர் நாடகங்களை எழுதுகிறார்கள், சிலர் நாடகங்களை இயக்குகின்றார்கள், சிலர் நடிகர்களாக இருக்கிறார்கள், ஆனால் இத்தனையும் ஒருங்கே கொண்டு தன்னடக்கமாக தன்னை குறுக்கிக் கொண்டு சிறுவர்கள் முதல் வயதானவர் வரை தனக்கு நண்பராக வைத்திருக்கும் ஓர் மனிதர் என்றால் அவர் அண்ணர் ஜேசுறட்ணம் தான்.

புலம் பெயர்ந்து வாழும் பலகோடி தமிழ் மக்களுக்கும் முகத்தார் ஜேசுறட்ணம் என்றால் தெரியாதவர் எவரும் இல்லை என்றே சொல்லலாம். அப்படிப்பட்ட ஓர் கலைஞனுக்கு கலைமாமணிப்பட்டம் மட்டும் மல்ல இன்னும் பல பட்டங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவருடைய நாடகங்கள் சிரிப்போடு சிந்தனைகளையும்உள்ளடக்கியதாகும். மேடையில் இவருடைய கருத்துக்கள் தழிழ்ஈழ விடுதலைக்கும் மக்கள் மத்தியில் ஓர் புதிய உந்துதலை வளர்க்கின்றது என்பதையும் மறக்க முடியாது.

என் அண்ணர் முகத்தார் ஜேசுறட்ணம் பலகாலம் வாழ்ந்து விரைவில் விடுதலை பெறஇருக்கும் தமிழீழ மண்ணில் தனது கலைப்பணியைத் தொடர வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

**ந. அருணகிரிநாதன்**
பொருளாளர்
தமிழீழ கலைஞர் ஒன்றியம்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழமுரசு

திரு. முகத்தார் யேசுரட்ணம் அவர்களை நான் இரண்டு தசாப்தங்களாக அறிவேன். அவரது கலைப் பணியைப் பாராட்டி பாரிஸ் கலைஞர்கள் கலை பாராட்டு விழா ஒன்றை நடாத்துவது சாலப் பொருத்தமானதே.

திரு. முகத்தார் யேசுறட்ணம் அவர்களின் கலைப்பணி தொடர எனது வாழ்த்துக்கள்

**சிவா**
ஆசிரியர்
ஈழமுரசு



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மனித அதிசயம்

நான் இலக்கணம் எழுதுபவனல்ல
இதயத்தை எழுதுபவன்.
மொழிகள் துளிர்த்தது பரஸ்பர புரிந்துணர்வுக்காக.
இதயங்களின் ஒலிபெருக்கிக்குத்தான மொழி என நம்புவன்.
நான் குற்றங்களைத் தேடி பூதக் கண்ணாடியுடன் அலைபவனல்ல.
நல்லவைகளை ரசிக்கக் கற்றுக்கொண்டவன்.
என் மனதை ஒரு தத்துவக் கிடங்காக எண்ணி பாரமேற்றிக் கொண்டவனல்ல.
அதை ஒப்பனை இல்லாத முகமாகவே வைத்திருப்பவன்.
50 வருடங்களாக கலையில் ஏனோ அலைந்திருக்கிறேன்.
காரணம் இன்னும் புரிந்தவனல்ல.
என்னைப் பார்த்தவர்கள் - பழகியவர்கள் - பயன்படுத்தியவர்கள் - பகிர்ந்து கொண்டவர்கள்..
நல்லவனாக இதயத்தால் எண்ணப்பட்டவனல்ல.
பாராட்டும்போது என்னைப் பார்த்துப் பரவசப்பட்டவர்கள்.
பக்குவம் கூறினால் இவனுக்கு என்ன தெரியும் என்கிறார்கள்.
போலிகளுக்கு வணங்காத மனமும் - உடலும் என்னுடையவை.
புகழுக்கும் முகத்துதிக்கும் மயங்காத நெஞ்சு எனக்கு.
நான் சாதனையாளனல்ல என் மனதை அறிந்தவன்
ஆனால் சாதிக்கவேண்டும் என தேடலுடன் அலைபவன்.
கலையரசன் சொர்ணலிங்கம் கலைப் பாசறையின் கூழாங்கல் நான்.
சுய விமர்சனம் அவன் எனக்குத் தந்த சுவாசம்.
என் 50 வருட கலைவாழ்வில் குறைந்தது பத்தாயிரம் கலைஞர்களையாவது சந்தித்திருப்பவன்.
அதில் மனிதனாகத் தேறியவர்களை எண்ண என் கைவிரல்களே போதுமானவை.
அந்த விரல்களிலும் சுட்டு விரலாகக் காட்டுவது முகத்தாரைத்தான்.
30 வருடங்களாக யேசுவை எனக்குத் தெரியும்.
அவன் எவருக்கும் முகம் சுளித்து நான் பார்த்ததில்லை.
முகத்தாராக அவன் முடி சூட்டுமுன்னே யேசுவை உணர்ந்த இன்னும அந்த முழுமையில் அதிசயம் காண்பவன்.
அதே முகம் - அதே மலர்ந்த சிரிப்பு - அதே அந்நியோன்யம்
அதே உரிமை - அதே புறங்கூறாமை - அதே திறமை
அதே நல்முகந்தான் (முகத்தார்) யேசுறட்ணம்
என் வாழ்வில் நான் கண்ட மனித அதிசயம் எங்களால் முடியவில்லை - இது நான் கொண்ட விமர்சனம்.
மெல்லிய உணர்வுகள்தான் கலைஞனின் வெற்றியும் தோல்வியும்.
பலர் சொல்லும் அனுபவங்கள் இவை.
உணர்வுகளைச் சிதறவிடாமல் திறமைகளை விதைத்து ஆதரித்து, அணைத்து, யாரிடமும் குறைகேளாமல், குறை தேடாமல், கலையும் வளர்த்து இன்று 'கலைமாணி' யும் கண்ட சிறப்பு அவனுக்குத்தான். என் நண்பன் முகத்தார் யேசுரட்ணம் தமிழ் ஈழ மண்ணின் மனித நேயம்மிக்க ஒரு மனிதன் - சாதனை கண்ட கலைஞன். அவன் வாழ்க என்றும் வளமுடன்.

என்றும் அன்பன்
**ஏ. ரகுநாதன்.**


படிப்பகம்

www.padippakam.com

தமிழன்
THAMILAN

# தன் குரலால் தாய் மண்ணை நினைவூட்டும் முகத்தார் யேசுறட்ணம்

1967 என்று நினைக்கிறேன் அப்போது நான் யாழ்ப்பாணம் "ஈழநாடு" பத்திரிகையில் உதவியாசிரியராக கடமையாற்றிக்கொண்டிருந்தேன் இலங்கை வானொலியில் கிராமிய நிகழ்ச்சியொன்றில் " முகத்தார் வீடு" என்ற நாடகம் ஒலிபரப்பட்டது!

இலங்கை வானொலியில் வி.என். பாலசுப்பிரமணியம், சிறிபத்மநாதன், கே.எம். வாசகர், ஜோர்ச் சந்திரசேகரன், இரா பத்மநாதன், வி.மதியழகன், வி.ஏ சிவஞானம், குலசீலநாதன், எஸ். மயில்வாகனம், செந்தில் மணி மயில்வாகனம், அப்துல் ஹமீட், கே.எஸ்.ராஜா, யோகா தில்லைநாதன், ராஜேஸ்வரி சண்முகம், கே.வி. சுந்தரலிங்கம், எஸ்.சுந்தரலிங்கம், லோகேஸ்வரன், கரா சிம்மானுவேல், ராஜகுரு சேனாதிபதி, கனகரத்தினம், எஸ்.கே. பராஜசிங்கம், நடராஜசிவம்.... என்று நிகழ்ச்சி தயாரிப்பாளர்களினதும், ஒலிபரப்பாளர்களினதும் பெயர்களும் குரல்களும் ஓகோ என்று ஒலித்துக் கொண்டிருந்த வேளையில் "முகத்தார் வீடு" நாடக நிகழ்ச்சி தொடங்கப்போகிறது என்றால் வானொலிகளின் பின்னால் கூடுகின்ற மக்கள் கூட்டம் வயிறு குலுங்ககுலுங்க சிரித்து ரசிக்கும் காட்சி இன்னும் என் மனதிலிருந்து மறையவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு பின்னால் " டாக்டர் சுப்பிரமணியம் பார்க்" என்றொரு பூங்கா இருந்ததை இன்றுள்ள இளைய சமுதாயத்தினர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஐரோப்பாவில் காணக்கூடிய பூங்காவின் தரத்துக்கு அது எந்த வகையிலும் இது குறைந்ததில்லை.

இலங்கை வானொலி அங்கே ஒலித்துக்கொண்டிருக்கும் "முகத்தார் வீடு" நாடக ஒலிபரப்பு நேரம் அந்தப்பூங்கா நிரம்பி வழியும். மக்களின் சிரிப்பு ரசனையை பார்த்து ரசிப்பதற்க்காகவே நானும் அவ்விடத்துக்கு செல்வேன். அவ்வளவாக அந்த நாடகத்தில் நவரச இனிமை இருந்தது.

இந்த முகத்தார் வீட்டிற்கு சொந்தக்காரன் யார்?

இலங்கை வானொலியிலும், பத்திரிகையிலும் இதற்குப் பெரியளவு விளக்கம் கொடுத்தேன். கிராமிய நிகழ்ச்சி ஒன்றில் "ஆறுமுகம்" என்ற கதாபாத்திரத்தின் மூலம் வானொலி நாடகத்தில் அறிமுகமான இளவாலையைச் சேர்ந்த எஸ. ஜேசுறட்ணம் அவர்கள் பின்னாலில் முகத்தார் வீடாகப்பிரபல்யமாகி சுமார் ஐந்தரை வருடங்கள் (286 வாரங்கள்) "முகத்தார் வீடு" என்ற நாடகத்தை எழுதி, நெறிப்படுத்தி ஒலிபரப்பிய பெருமைக்குரியவர். இத்துடன் இவரது வானொலித் தொண்டு நிற்கவில்லை "கதம்பம்", "பருவக்காற்று", "சண்டியன் சின்னத்தம்பி", மாடி வீட்டு மருக்கொழுந்து" என்று இன்னும் பல நாடகங்களை எழுதி நெறிப்படுத்தி வானொலியில் ஒலிபரப்பாக்கியிருக்கின்றார். அத்துடன் அவற்றை கலை நிகழ்ச்சிக்கு மேடைகளிலும் அரங்கேற்றியிருக்கிறார். அதுமட்டுமல்ல இலங்கையில் சிறந்த நாடக நெறியாளர்களான கே.எம்.வாசகரின் "மனித வலை", அங்கையன் கயிலை நாதனின் "கடல் காற்று" சில்லையூர் செல்வராஜனின். "தணியாத தாகம்" வரணியூரானின் "அசட்டு மாப்பிள்ளை" சு.வேயின் "முற்றத்து ஒற்றைப்பனை", அகஸ்தியரின் "அலைகளின் குமுறல்", "கோபுரங்கள் சரிகின்றன", " எரிலை வெடித்த போது "... போன்ற வானொலிப்படைப்புகளிலும் தன் முத்திரையைப் பதித்தவர் யேசுறட்ணம் அவர்கள்.

இவர் தமது படைப்புகளில் பயன் படுத்திய பழகு மொழியின் சமுத்திரம், வீரியம், நாடகச்சுவடிக்கு கம்பீரமளித்தன. தமிழரின் உன்னதமான பரீச்சயம் நாடகங்களிலும் ஒவ்வொரு வரியிலும் வெளியாயிற்று. யார் யாரை இந்த நாடகங்கள் சென்றடையவேண்டுமோ அவர்களும் இவை முடியும் வரை உட்கார்ந்து செவிமடுத்தனர். இவரது கலை வன்மையும், கருத்தாளுமையும் நளின, சிலேடை பாணியும் கேட்போருக்கு கவர்ச்சியாக இருந்தன.

இவ்விதம் மண்வாசனை நிரம்பிய பல நாடகங்களை எழுதியும் நடித்தும் ஒரு குணசித்திர நவரச நடிகராக புகழ் பெற்ற ஜேசுறட்ணம் அவர்களைப் பாராட்டி ஜேர்மனியில் இயங்கும் இரங்கும் இல்லம் இவருக்கு கலைமாமணி


படிப்பகம்

www.padippakam.com

என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தமை பாராட்ட படவேண்டிய விடயம்.

தன் துறையிலேயே ஆத்மார்த்தமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை அவர்கள் வாழும் போதே பாராட்டப்பட வேண்டும் என்ற ஆசையுடையவர்கள். இதனால் தான் பலவித இடையூறுகளின் மத்தியிலும், 1992ம் ஆண்டு பாரிஸில் நடந்த "கலைக்கோயில்" நடிப்பிசைக்காவலர் கிரகறி தங்கராஜா அவர்கள் கலைத்துறைப் பிரவேச வெள்ளி வழாவிற்க்கு தலைமை தாங்கியதுடன், கலைப்பணியில் தம்மை அர்ப்பணித்திருக்கும் நமது தாயக சகோதர கலைஞர்கள் இருபத்தியொரு பேருக்கு கிறகிரி தங்கராஜா வழங்கிய தங்கப்பதக்க பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்து கௌரவித்தேன் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்டுகிறேன். நான் எனது சொந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து 1979ல் புறப்படும் வரை "முகத்தார் வீடு" ஜேசுறட்ணம் அவர்களின் கலைப்பணியை பாராட்டி அங்கே விழா எடுக்கப்பாடாததையிட்டு நான் வருந்தியதுண்டு. இதன் பின்னர் செங்கையாழியானின் வாடைக்காற்றில் நடித்து ஈழத்து ஜனாதிபதி விருதை ஜேசுறட்ணம் அவர்கள் பெற்றதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்து மகிழ்ந்தேன்.

இது மட்டுல்ல 1993 அக்டோபர் மாதம் ஜேர்மன் நாட்டின் தலைநகர் பெர்லினில் நடைபெற்ற அகில உலக தமிழ் மன்ற 3வது மாநாட்டில் நான் கலந்து கொண்டிருந்த போது அவ்விழாவிற்க்கு தலைமை தாங்கிய மூதறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் ஈழத்து தமிழரின் தமிழ்த் தொண்டினை புகழ்ந்து கூறியபோது ஜேசுறட்ணம் அவர்கள் பற்றியும் குறிப்பிட்டு 1992ல் திருச்சியில் நடைபெற்ற ஈழறிஞர் மறுவாழ்வுக் கழக கலைநிகழ்ச்சி ஒன்றின் போது ஜேசுறட்ணம் அவர்களின் கலைத்திறனை பாராட்டி "கலைப்பணிச் செல்வர்" என்ற பட்டத்தை தாம் வழங்கி கௌரவித்ததாக கூறக்கேட்ட போது என் மனமகிழ்ச்சி இரட்டிப்பாகியது. சினிமாவிலும் சரி, நாடகத்துறையிலும் சரி, எந்த துறையிலும் சரி, இந்திய தமிழ் நாட்டினரை மிஞ்சிவிட முடியாது என்றிருந்த காலம் மாறி ஈழத்தவர்களின் இலக்கிய படைப்புகளை விலைகொடுத்து வாங்கி தமிழ் நாட்டில் நூல் வடிவில் வெளியிடப்படும் நிலைக்கு ஈழத்தவர் உயர்ந்துள்ள இவ்வேளையில், தமிழ் ஈழத்து கலைஞர்களுக்கும் இந்தியாவில் பட்டமளித்து கௌரவித்திருக்கிறார்கள் என்று அறியும் போது மகிழ்ச்சி இராதா என்ன?

வானொலி, மேடை நாடகத்துறையில் மட்டுமல்ல சினிமாத்துறையிலும் சாதனை படைக்க தன்னால் முடியும் என்பதை பாரிசிலிருந்து வெளியிடப்பட்ட பொன்கலைக் கூடம் வழங்கிய கீழ்க்கரவை பொன்னையனின் "சத்தியகீதை", "புயல்" ஆகிய திரைப்படங்களிலும் இரா.குணபாலனின் "முகத்தார் வீடு" எஸ்.கே.ராஜனின் "இன்னும் ஒரு பெண்" ஆகியவற்றிலும் மற்றும் பாரிசில் தயாரிக்கப்பட்ட சின்னத்திரை காவியங்களிலும் நிருபித்தவர் ஜேசுறட்ணம் அவர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் 'முகத்தார் வீடு' திரைப்பட ஆரம்ப பூஜையை என்னைக் கொண்டே நிறைவேற்றினர் என்பதையும் இம்மாபெரும் கலைஞர் ஜேசுறட்ணம் அவர்கள் பங்குகொண்ட இந்த திரைப்பட ஆரம்ப பூஜையை நிகழ்த்த எனக்குத் தரப்பட்ட சந்தர்ப்பத்தை என் வாழ்நாளின் பாக்கியமாக கருதுகிறேன் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோன்.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் தன்கலைப்பணிக்காக பராட்டப்பட்டவெம் ஜேசுறட்ணம் அவர்கள் ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்து வந்த பின்னரும் ஓய்ந்திருக்கவில்லை உடல்நிலை சீரில்லாத நிலையிலும் பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், சுவிற்சலாந்து, நெதர்லாந்து, இத்தாலி என்று பல்வேறு நாடுகளில் இருந்து வரும் அழைப்புக்களை ஏற்று கலைப்பணி செய்துவரும் ஜேசுறட்ணம் அவர்கள் நிச்சயம் பராட்டப்படவேண்டியவர். ஐரோப்பாவிலிருந்து ஒலிபரப்பாகும் வானொலிகளிலும் இவரது குரலைக்கேட்கமுடிவது தமிழீழகலையுலகு செய்த பாக்கியமே. லண்டனிலிருந்து 24 மணிநேரமும் ஒலித்தொண்டாற்றும் I.B.C என்ற அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்தும் இலங்கை இந்திய மத்தியகிழக்கு நாடுகளுக்கான ஒலிபரப்பில் தன் சிம்மக்குரலால் அந்தநாள் ஞாபகத்தை மீட்டி கவர்ந்து வருகிறார் என எனது இந்திய நண்பரான சிவபாதசுந்தரம் அவர்கள் சொல்லக்கேட்டபோது எனக்கு ஆனந்தமே.

இவ்வித புகழ்மிக்க ஜேசுறட்ணம் அவர்கள் வாழ்க நலமுடன் நீடுழி என்று எனது குலதெய்வம் அனலைதீவு நாயனாரிடம் வேண்டுவதுடன் இவரிற்கு பாரிசில் விழா எடுக்கும் விழாக்குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

**எஸ்.கே.காசிலிங்கம்**
ஆசிரியர்- தமிழன்
பாரிஸ்-பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

# பிரியாலயா சினிஆட்ஸ்

"பிரியாலயம்" துரைஸ்
Piriyallayam Thuraies
3, Rue Des Jonquilles
75014 - Paris
France

"Piriyallaya" Cine Artss

## இந்த முகம்(த் தா)யார்?
## வணக்கத்துக்குரிய
## யேசு
## பெறுமதிக்க
## ரத்தினம்

என் வயசு, அவரின் கலை உலக அனுபவம்.

இவரைப் பற்றி எடுத்துச் சொல்ல என்னால் இயலுமா?

மனதில் தயக்கம் இருந்தாலும் ஒரு மனிதன் தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த தவறக்கூடாது என எண்ணுபவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில்...

என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய இந்த ரத்தினத்தைப் பற்றி சில நிறங்கள்....

நான் பிறந்த மண்ணில் கலையை நேசிக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து வானொலி மூலம் ஐயாவின் எழுத்துக்கும், குரல் வளத்திற்கும் ரசிகனானேன்.

ஆகா? அற்புதமான ஆற்றல்மிக்க இந்த ரத்தினத்தை சந்திக்கமுடியாதா? என்ற ஏக்கம் ஏக்கமாகவே போய்விட்டது அங்கே.

ஆனாலும் என் மனம் எண்ணியது ஈடேறியது பாரிஸ் நகரிலே...

மறுபிறப்பெடுத்த ஐயாவின் பூப்போன்ற மென்மையான இதயம்தனை வானொலியிலும், நாடகங்களிலும், வீடியோப் படங்களிலும் பாரிசில் பங்கேற்று இணைந்தபோது புரிந்து கொண்டேன்.

ஆழமாக அவர் மீது நான் கொண்ட காதலின் துணிவை அடித்தளமாக வைத்து என் இரண்டாவது வீடியோப் படமான 'ராஜாவின் ராகங்களில்' நடிக்க கேட்டேன். இல்லை... இல்லை நடிப்பை சொல்லித்தருமாறு கேட்டேன்.

முழுமனதுடன் முகத்தார் ஐயா பங்களித்தார். என் அப்பாவின் அப்பாவாக முத்தமிட்டு நடித்தார். முகங்கோணாமல் பயப்படாமல் சொல்லித்தா.. சொல்லித்தா என்றார்.

நான் எதைச் சொல்லிக் கொடுக்க....

நான் அவரிடம் படிக்க அல்லவா போனேன். கலை உலகின் கைக்குழந்தை நான் அவரிடம் கற்றுக் கொண்டது பல... பணிவு.. பண்பு... பொறுமை... ஆளுமை... அனுசரிப்பு... நவரச நடிப்பு இன்னும பல.....

இப்படியாக எங்கள் ரத்தினத்தைப் பற்றி பல வண்ணங்களில் என் எண்ணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். என்னுடன் இன்னும் பலர் இந்த மலரில் சொல்கின்றார்கள் இந்த ரத்தினத்தைப் பற்றி. நானும் நீங்களும் அறியாதவற்றை அறிந்து கொள்வோம். அப்போ! இப்போ......

இதயம் நிறைந்த வாழ்த்துக்களை கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் படைத்த இந்த இனியவருக்கு இறைவன் அருளோடு இவ்வையகம் உள்ளவரை வாழவேண்டும் என்று வாழ்த்தி 'மனிதன் வாழும் போது கௌரவிக்க வேண்டும்' என்ற ஒரு மாபெரும் சிறந்த எண்ணத்தை கொண்டு செயல்பட்டு 'கலைமாமணி' விருதினை வழங்கியுள்ள ஜேர்மனி இரங்கும் இல்லம் திருவாளர் சிவனடியான் ஸ்ரீபதி அவர்களுக்கும், பாரிஸ் ஈழநாடு நிறுவனத்தை சேர்ந்தோருக்கும் என் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க எங்கள் ரத்தினம்! என்று கூறி எங்கள் யேசுவை வணங்கி வாழ்த்தும் ஐயாவின் ரசிகன்

**'பிரியாலயம் துரைஸ்'**

பாரிஸ் - பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

# முது பெரும் கலையின் செல்வமே

தமிழீழமக்கள் என்றுதான் நாம் புலம்பெயர்ந்த எங்கும் பறைசாற்றுகின்றோம் இந்தச் சமுதாயம் புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்ந்து எதைச் சாதித்தார்கள்? எந்தச் சமூகத்தின் கலைகளைப் பரப்பினார்கள்? என்பது கேள்விக்கும் ஆச்சரியத்திற்கும் உரியதல்ல! இருந்தும் கேள்விக்குரியதாக இருக்கின்றது? நீங்களும் நானும் தேடவேண்டிய தேடலின் தெரிவிப்பாகவும் உள்ளது! இந்த இடத்தில் முகத்தார் சந்தியாப்பிள்ளை.ஜேசுறட்ணம் மூலமாக முரசறைவிக்கிறேன் சமுதாயத்தில் நாடகக்கலைக்குள்ள வலிமை, விளக்கம், பயனளிப்பு, தாக்கம், மிகச்சிறந்த கொடையாகும். கற்றவர், கல்லாதவர், ஆண், பெண் குழந்தைகள் அனைவருக்கும் விளங்கும்படியாக பாத்திரங்களைப் பேசவைத்துத்தரும் காட்சிக் கோவையின் மணிமுத்துச் சிந்தும் சிறப்பு நாடகக் கலைக்கே உரியது அதிலும் நகைச்சுவையால் சமூகச் சீர்கேடுகளை புரிந்துணர்வுடன் சிந்திக்கவும், சிரிக்கவும் வைப்பதில் நகைச்சுவை நாடகங்களின் தாக்கம் மிகப் பேறானது. நாவல் வாசிப்பதை நிறுத்திக் கொள்ளலாம் - மேடைப்பாடல்களை இடைநிறுத்தி பிற்பாடு கேட்டுக் கொள்ளலாம் - கவிதை வாசிப்பதை கூட இடைநிறுத்திப் பிற்பாடு வாசித்துக்கொள்ளலாம் நாடகத்தில் இந்த முறை ஏற்படுத்திக் கொள்வது நடைமுறைக்கு ஒவ்வாது ! நாடகமானது அந்நேரக் காட்சி! அங்கஅசைவுகள்! வசன வீச்சுக்கள்! உணர்ச்சியின் வெளிப்பாடுகள் விட்டகுறை தொட்டகுறை சகநடிகனோடு அனுசரித்து நடிக்கும் நடிப்பின் முயற்சியால் தான் பார்வையாளர்களின் நெஞ்சைத் தொட்டு நிறுத்த முடிகின்றது.

"கலையுலகில் படைப்பாளியாகிய கலைஞனே மன்னன் ஆவான் என்பதே உண்மை. கலைஞன் மன்னன் மட்டுமல்ல கலையுலகின் கடவுளே அவன் தான் இதை ஒருவரும் மறுக்க முடியாது என்று அடித்துச் சொல்கிறார் "முருகையன்" இத்தைய தகுதியுள்ள கலை மன்னர் தான் முகத்தார் எஸ்.ஜேசுறட்ணம் அறுபத்தைந்து வயதைக் கடந்தும் நாடகம், சினிமா, வானொலி,ஊடான கலைக்குள் கண்போல் ஒளி சிந்துகின்றார். தமிழன் வகுத்த வாழ்வியல் முத்தமிழாம் மூன்று தமிழ் வளர்ந்தது இயல், இசை, நாடகம் மூன்றும் இனிதே பண்டைக்காலம் தொட்டு பண்புகளைத் தழுவி சமூகத்துடன் பேசப்பட்டது. "கலை இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்புக்களெல்லாம் அடிப்படையில் மனிதக் கூட்டுப் படைப்புக்களே ஆகும் திறமையான எழுத்தாளனோ கலைஞனோ அதற்குப் பூர்த்திபெற்ற வடிவம் தருகின்றான்." என்கிறார் "கார்க்கி" இந்தவகையில் சிறந்த கலைஞன் முகத்தார் கலையார்வத்தில் பட்டைதீட்டப்பட்ட வைரமாகவும் நேர்த்தியான திறமைசாலியாகவும் ஒளி வீசுகின்றார். இவருடைய நாடகப்பாணி வசனங்களில் தனித்துவம் தெளிவுபெறுகிறது. மரபுவழி நாடகத்திலும் நவீன நாடகங்களிலும் நடிப்புத்திறனும் வசன ஆற்றலும் அற்புதமாக அமைகின்றது. நகைச்சுவைப்பாங்கான நாடகங்களைத் தந்து மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் சமூகவுணர்வுடைய கலைஞனாகத் திகழ்கிறார். இவரது வானொலி நாடகங்கள் போற்றுதற்குரியது. சாதனைக்குள்ளானதுமாகும். 1966ல் தொடங்கி 1985 வரையும் இலங்கை வானொலியையும் ரசிகர்களையும் தன் திறமையால் ஆட்கொண்டவர். "முகத்தார் வீடு" ஐந்தரை வருடங்கள் தொடர்ந்து இடம்பெற்றது என்பது சாதனைதானே. நூற்றி இருபத்தி மூன்று "கதம்ப நிகழ்ச்சிகள்" என்பது நினைவில் நின்று மறையக் கூடிய நிகழ்வா? பருவக்காற்று ஐம்பத்தியிரண்டு வாரங்கள் மக்கள் மனம் மகிழ்ந்த உணர்வை மறக்கமுடியுமா? சண்டியன் சின்னத்தம்பியின் சாதனைப் பட்டியல் போட்டால் இந்தக் கட்டுரை தாங்குமா? கலை கலைக்காகவல்ல. கலை சமூகத்திற்றகாகவே என்பதற்கிணங்க சமூகத்தோடு இரண்டறக் கலந்தவன் நான் தான். கலைஞன். கலைஞனை விலைகொடுத்து வாங்க முடியாது. கலைத்தாகம் இறக்கும் வரை தணியாது. 1985களில் நாட்டில் ஏற்பட்ட சண்டித்தனத்தால், பேரினவாதிகளின் ஆணவ அடக்குமுறைக்குத் தப்பி தாய்த் தமிழகம் வந்து ஒதுங்கிய கவலையிலும், முகத்தார் தன் கலைப்பணியை வேகமுடன் எடுத்திடத் தொடுத்தார். ஓர் நாடகத்தின் பெயரைப் பாருங்கள் உருகுதடா நெஞ்சம் "இளைய ஈழ அகதிகள்" 24.02.1990 களில் இந்த நாடகம் திருச்சியில் மேடையேற்றப்பட்டது. இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினர் மறைந்த முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் இங்குதான் எங்கள் மன்னன் முகத்தாருக்குப் பட்டம் வழங்கப்பட்டது. "கலைப் பணிச் செல்வர்" இப்பட்டத்தை முகத்தார் தாயினும் மேலாக மதிக்கின்றார். முத்தமிழ் காவலர் சிறந்த வணிகராக. நாவண்மை மிக்கவராக. நாவலராக. மொழிப் போராட்ட வீரராக. தன்னலம் கருதா அரசியல் வாதியாக, நுண்ணறிவு மிகுந்த எழுத்தாளராக. சிறந்த நாடக ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிய தமிழறிஞரிடம் பட்டம் பெற்றமையும் நாடகக் கலையின்பால் உள்ள காதலால் பட்டம் அளித்தமையும் சிறப்புக்குரியனவே.

எம்மிற் பெரும்பழி கூறும் – பலர்
நம்மில் அந்தப் பழி வரா வாழ்ந்தவர்
நம் கலைஞர் முகத்தார் என்பது என் கருத்து

மக்களோடு, கலைஞரோடு தன் அன்பை. கலையார்வத்தை இறுகப் பிணைத்துக் கொண்ட முகத்தார் "கலைப்பணிச் செல்வர்" பட்டத்தில் மகிழ்வதும் சாலச் சிறந்ததேயாகும்.

1993 பிரான்ஸ் மண்ணில் தஞ்சம். இங்கும் விட்டாரா தன் கலைப்பணியை. எத்தனை நாடகங்கள் இன்றும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. தமிழனின் சாதனையில் நிலைத்து நிற்கும் "றேடியோ ஆசியா வானொலி" யில்



படிப்பகம்

www.padippakam.com

ஐம்பித்தியிரண்டு வாரங்களைத் தாண்டியும் தன்னுடைய சமகாலக் கலைஞரான அப்புக்குட்டி ராஜகோபாலுடன் இணைந்து நடத்தும் நாடகங்களில் என்ன சாதனை. இது மட்டுமல்லாது கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளிலும் இவரது நாடகப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புகலிடத் தமிழன் ஐரோப்பியக் கலாச்சாரத்தில் சிக்கிச் சீரழியும் உண்மைகளும் நகைச் நகைச்சுவை வடிவான போக்கில் புரிந்துணரத் தந்து கொண்டிருக்கிறார். பிரான்சு தேசம் சிந்தனைக்குரிய நகைச்சுவை. நாடகங்களைத் தந்ததில் உலகப் புகழ் பெற்றது. உலக நாடக ஆசிரியர் "மோலிவர்" உலகின் முதல் நகைச்சுவை நாடகத்தின் தந்தையாவார். அந்த மண்ணில் எங்கள் முகத்தாரின் நகைச்சுவை நாடகங்கள் ஒலித்துக் கொண்டிருப்பது பெருமைக்குரியனவே. இதனடிப்படையில் திரும்பவும் என் தாய்மண்ணுக்கு ஒரு முறை போய் வருகின்றேன். "அதிகப்படியான விடயங்களில் வெட்கப்படும் மனிதன் மிக மதிக்கத்தக்க மனிதானாகிறான்." என்கிறார் "பெனாட்ஷா" இதைவிட அதிகப்படியான விடயங்களில் மிக அடக்கமாகவும் உள்ளவர் முகத்தார். கடந்தகால நிலமைக்கும் தற்கால அனுபவத்திற்கும் இடையே நிறைய வேற்றுமைகள் முகத்தாரிடம் காணப்படுகின்றது. தற்போது அவரது "வயது"உருப்பேறு அவரது "தோற்றம்" வாழ்வின் கவலை - புகலிட வாழ்வு எந்தநிலைமையிலும் தாயின் மடி வாழ்விலுள்ள மகிழ்வு. பாசம், அணைப்பு, ஆறுதல் எத்தகைய சுகபோக வாழ்விலும் வந்திடப்போவதில்லை " பழம் கஞ்சிகூடப் பஞ்சாமிர்தமாகும் - தாங்கமுடியாக் கவலைகூட காற்றோடு பறந்து போகும். அந்த மண்ணில் "வாடைக்காற்று" எனும் சினிமாவில் "பொன்னுக்கிழவன் பாத்திரம் ஏற்றுத் திகழ்ந்த சிறப்பை நான் இங்கு குறிப்பிடவே வேண்டும். 1978களில் இப்படம் திரைக்கு வந்தது அப்போது முகத்தார் நடித்த நடிப்பை விமர்சிக்கிறார் "சஞ்சயன்" பொன்னுக்கிழவனாக நடித்த நடிப்பும் நடையுடை பாவனைகளும் இதயத்தைத் தொடுகின்றது. ஜேசுரட்ணம் நடிப்பில் கொடிகட்டிப்பறக்கின்றார் என்றும் பிற்பாடு ஆறு வருடங்கள் கழித்து ...... 27.06.1984களில் சிந்தாமணியில் "சஞ்சயன் " விமர்சனம் எழுதினார் வாடைக்காற்றில் சிறந்த நடிகருக்கான ஜனாதிபதிப் பரிசும் கிடைத்தது இது மட்டுமல்லாது இப்படத்தில் நடித்த பத்துப்பேரை சிந்தாமணி 09.04.1978களில் ஆனந்தவிகடன் பாணியில் கு.மா.சுந்தரம் பின்வருமாறு புள்ளிகள் வழங்கினார் (ஆதாரம் இ.த.சி.)

| | | | |
|---|---|---|---|
| 1. முகத்தார் ஜேசுரட்ணம் | 65 | 6. ஏ.சு. மனோகரன் | 45 |
| 2. கே.ஏ. பாலசந்திரன் | 60 | 7. சந்திரகலா | 40 |
| 3. கே.ஏ. ஜவாகர் | 58 | 8. ஆனந்தராணி | 35 |
| 4. வசந்தா அப்புத்துரை | 56 | 9. எஸ். எஸ். கணேசபிள்ளை | 28 |
| 5. லடீஸ் வீரமணி | 50 | 10. டாக்டர். இந்திரகுமார் | 20 |

என்று புள்ளிவகுத்திருந்தார்கள் இந்தவகையில் முகத்தாரின் திறமையில் கலையின் மேன்மை ஓங்குக நகைச்சுவையில் நசுங்காத சமூகவுணர்வுடைய உணர்ச்சியான வசனங்கள் இழையோடுவதில் முகத்தாரின் சாதுரியம் சாதனைக்குரியதே. நவீன நாடக அமைப்பில் வானொலி நாடகங்கள் எப்படிப் போற்றுதற்குரியதுவோ! அதுபோல் மேலை நாடுகளிலும் சிறந்தனவாகவே அமைகின்றது. செவிப்புலனுக்குகே உரியதும் தொழில் நுட்ப வழியில் வருவதுமான இந் நாடகங்கள் இலங்கை வானொலியில் பெயர் பெற்றது போல் ஐரோப்பிய, அமெரிக்க தமிழ் வானொலிகளிலும் சிறப்புற ஒலிக்கின்றது. மேலைப்பாங்கான நாடகங்களை பச்சையான பாலியல் மிகுதியாகக் காணும் நாட்டில் பாக்கின்றோம். இந்தநிலை நம் மரபுக்குள் புகுந்துவிடுதல் ஆச்சரியத்துக்குரியது. நம்மரபு நம்பண்பாட்டுடனே இருந்திடல் வேண்டும். 0பாரம்பரியத் தொலைநோக்கோடு பாரம்பரியக் கலைகளான, நாடகம், நாட்டியம், கிராமியக் கலைகளின் ஊடாக நவீனத்துவத்திற்குரிய மெருகேற்றத்தோடு நாடகங்களைக் கையாளுதல் அவசியம்.

மேற்குமயமான ஐரோப்பிய சூழலில் வாழ்கின்ற நம் கலைஞர்கள் கலைகளில், கதைகளில் இரவல் ஊடகங்களைக் கலப்பதும் வாஸ்த்தவம்தான் இத்தகையான நிதானப்போக்கு முகத்தாரிடம் நிறைவே உள்ளது. அதற்கான காரணங்களையும் காரியங்களையும் அலசி ஆராய்ந்தால் முகத்தார் "மனிதநேயக் கலைஞன்" என்பதில் அபத்தம் இல்லை. பராட்டுக்குரியவர் இந்த புலம்பெயர்ந்த மண்ணிலும் சாதனைக்குரியவர் ஆகின்றார்.

எம்மினமே வியகலை கள்சூறி
தம்மினமே வியசுய நலம்கழித்து
தமிழினவா ழ்வின்கதி யின்உயிரே!
ஆடிப்பெரும் கதிர்க் கழிப்பே
தாயுள மானவர் ஆகினரே
கவிமேவும் கவிஞன் வாழ்த்தும்
வந்தவர் சேர்ந்தவர் இணைவில்
வரலாறு கூறும்மகிழ் இரத்தினமே.

**கி.கிறிஸ்ரியன்**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் கலைஞர் அறக்கட்டளை

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் வழியாக உலகில் எந்தவொரு கலைஞன் கௌரவிக்கப்படும் பொழுதும் பெருமைப்படவேண்டிய அந்த நேரங்களிலும் கூட எம் மனதில் ஒரு பக்கத்தில் பெரும் வலியும் ஏற்பட்டுவிடுகிறது. ஏனென்றால் உலக அரங்குகளில் எமது கலைஞர்கள் முகமிழந்தவர்களாகவே உள்ளார்கள்.

ஈழத் தமிழர்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டதினால் சொந்தத் தேசத்தின் சுகங்களும் கௌரவங்களும் கூட எமக்கு இல்லாத சொந்தமாகவே மாற்றப்பட்டுவிட்டது.

இந்த நிலை மாறவேண்டும். மாற்றப்படவேண்டும் என்ற மன எழுச்சியில் உருவானதே தமிழ் கலைஞர் அறக்கட்டளை. இந்த அறக்கட்டளை மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட எமது கலைஞர்களின் தொலைந்துபோன முகங்களைத் தேடி......... கௌரவிக்க முற்பட்டது.

இந்த விடா முயற்சிக்கு கலைக்காவலர் ஸ்ரீபதி அவர்களும், ஈழாநாடு பத்திரிகை நிறுவனமும் உறுதுணை புரிய முன்வந்துள்ளது.

இதனால் வருடாவருடம் எமது கலைஞர்களில் கௌரவிக்கப்படவேண்டியவர்களுக்கு 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வரிசையில் 1997ம் ஆண்டின் 'கலைமாமணி' விருதைப் பெறும் தகுதியை தனதாக்கிக் கொண்டார் முகத்தார் எஸ். யேசுறட்ணம் அவர்கள்.

எந்தவொரு மூத்த முன்னோடிக் கலைஞர்களின் பாதிப்புமில்லாத தனித்தன்மை வாய்ந்த சிறந்த நடிகராக வானொலி, மேடை நாடகங்களில் முத்திரை பதித்து 'முகத்தார்' என்ற பட்டப் பெயரை தனதாக்கிக் கொண்ட கலைஞர் யேசுரட்ணம் அவர்கள் உலக அரங்கில் கௌரவம் பெறாத சோகத்திலும் எம்மால் அவரைக் கௌரவிக்க முடிந்ததே என்ற பெருமை மேலோங்கி நிற்கின்றது.

'கலைமாமணி' விருது சாதாரணமாகக் கருதமுடியாத பெரும் விருதாக ஈழத் தமிழ் கலைஞர்களுக்கான 'ஆஸ்கார்' விருதாகவே எண்ணி பெருமைப்படக் கூடியதாகவே இதனைப் பெறும் கலைஞர்களின் பெருமை உள்ளது. எத்தனை துயரங்கள் தடங்கல்கள் ஏற்பட்டாலும் முன்னேறிச் செல்வோம். முத்திரை பதிப்போம். முகவரிகளை நாமே நமக்கு எழுதிக் கொள்வோம்.

**சி. பாலச்சந்திரன்**
*காப்பாளர்*



படிப்பகம்

www.padippakam.com

# எந்த விருதுக்கும் சொந்தக்காரர் இவர்...

## ஒரு விருது கௌரவம் பெறுகிறது

முகத்தார்
இந்த வார்த்தைக்குத் தான்
எத்தனை வசீகரம்!
இந்த அடைமொழிக்குள்
அடைபட்டுக்கிடப்பவையோ
ஏராளம்
கலையின் மொத்தப் பரிமாணமும்
உம்மிடத்தில்
குத்தகை எடுத்துக் கொண்டன போலும்
எத்தனை எத்தனை வகைகள்!
மேடையில் வானொலியில்
திரையில் தொலைக்காட்சியில் என்று
ஊடகங்கள் அனைத்திலும்
உம் தடத்தைப் பதித்துவைத்தீர்
கலைக்கும் முதுமைக்கும்
முரண்பாடு உண்டு போலும்
அதனால் தானோ இன்றும்
இளமை மாறா மிடுக்குடன்
இணையில்லாக் கலைஞனென
தலைநிமிர்த்திச் சிரிக்கின்றீர்
'கலைமாமணி'
இது உங்களை அலங்கரிக்க வந்த
இன்னொரு விருது
நிலவுக்குப் பட்டுச் சேலை
கட்டிப்பார்ப்பதில்
எனக்கு உடன்பாடில்லைத் தான்,
எனினும்
பொழுதெல்லாம்
பட்டங்கள் தகுதி பார்த்து ஒருவரோடு
ஒட்டிக்கொள்வதில்லையே
இது -
தமக்குத் தாமே பட்டங்கள் சூட்டிக்கொண்டு
'தம்பட்டம்' அடிப்பவர்களின் காலம்.
இங்கே
பட்டம் கொடுப்பதற்கு மட்டும் தான்
எந்தச் சட்ட விதிகளும் அவசியமேயில்லை
'தமிழறிஞர்' என்றோர் விருது பெற - ஒருவர்
புலமையோடிருக்கவேண்டியதில்லை
அவரிடத்தேயிருக்கும்
அளவில்லாக் கையிருப்பே போதும்
'கலை' என்றால் கிலோ என்ன விலை
என்பவர் கூட இங்கே
'கலையாசான்' ஆகலாம்
அவர் எத்தனை 'கடை' வைத்திருக்கிறார்
என்பதைப் பொறுத்தே அது இருக்கு
ஒருவர் தலைக்குள் என்ன இருக்கு
என்பதை வைத்து
'கிரீடம்' சூட்டுவது அந்தக் காலம்
ஒருவர் கைக்குள் எவ்வளவு இருக்கு
என்பதை வைத்து
'கிரீடம் சூட்டுவது இந்தக் காலம்
'பட்டம்' பெறுபவரால் மாத்திரமல்ல - அதனைக்
கொடுப்பவர்களாலும் அது பெருமைப்பட வேண்டும்
முகத்தாரே!
எந்த விருதுக்கும் சொந்தக்காரராகக் கூடிய
தகுதி பெற்றவரே
இன்று -
நீங்கள் கௌரவிக்கப்படவில்லை
'கலைமாமணி' என்னும் பட்டம்
உங்களினால் கௌரவிக்கப்படுகிறது.

- அருந்ததி



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞர்களில் நான் கண்ட மாமனிதன் - கலைமாமணி

# 'முகத்தார்' எஸ்.யேசுறட்ணம்

என் ஆசை அத்தார் முகத்தார்
கலைத்துறையின் மூத்த கலைஞர்
உள்ளத்தில் இன்னும் இவர் குழந்தை
இலங்கை வானொலியில் பல ஆண்டுகளாக
நாடகங்கள் பல எழுதி இயக்கி நடித்தவர்.
திரை உலகிலும் நடித்து சிறந்த குணச்சித்திர
நடிகர் விருதும் பெற்றவர்.
அன்று தூரத்தேயிருந்து பார்த்து
ரசித்தவர்கள் நாம்.
இன்று எம்மோடு வாழ்ந்து, இணைந்து
நடித்து வருபவர் ஆசை அத்தார்.
ஐரோப்பா எங்கினும் தன் வீரக் குரலால்
பவனி வந்து அனைத்து உள்ளங்களிலும்
என்றும் நீடித்திருப்பவர்.
எல்லாக் கலைஞர்களாலும் முற்று முழுதாக
ஏற்றுக் கொள்கின்ற தன்னடக்கமான
மாபெரும் தனிக் கலைஞன்
என் ஆசை அத்தார்.
அவர் கலைமாமணி விருது பெறும்
இந்நன் நாளில் அவரை
பல்லாண்டு காலம் வாழ
கலையுலகில் என்றும்
நீண்ட சேவையாற்ற வேண்டும்
என வாழ்த்தும்
ஆசை மச்சான் சரவணை.

**ஆர். ரி. எம். பிரதர்ஸ் (இரா. குணபாலன்)**

*(கலைமாமணி விருது பெற்ற முகத்தார் ஜேசுறட்ணம் அவர்களை பாராட்டி 15.11.1997 அன்று வழங்கப்பட்ட வாழ்த்து மடல் இது.)*



படிப்பகம்

www.padippakam.com

# கலைப்படைப்புக்களில் முகத்தார்

















படிப்பகம்

www.padippakam.com

# கலைப்படைப்புக்களில் முகத்தார்



















படிப்பகம்

www.padippakam.com

Fédération Culturelle Des Tamouls en France
பிரான்ஸ் தமிழர் கலாச்சார பேரவை
FRANCE TAMIL'S CULTURAL FEDERATION

# *A Man of clean...*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் - குறள்

இது வள்ளுவனின் வாக்கு. முகத்தார் திரு. யேசுறட்ணம் அவர்களை கூடுதலானவர்கள் ஒரு மாபெரும் கலைஞனாகவே நோக்குகிறார்கள். நான் அவரை ஒரு மனித நேய கண்ணோட்டத்தோடு நோக்குகின்றேன். 'ஒரு மனிதன் என்பவன் எப்படியும் வாழலாம்' என பலர் வாழ்கின்றார்கள். ஆனால் இப்படித்தான் வாழவேண்டும் என்ற கட்டமைப்புடன் இருந்து வாழ்பவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்கின்றார்கள்.

அந்த வகையிலே முகத்தார் எஸ். யேசுறட்ணம் அவர்கள் ஒரு நெறிமுறையுடன், மனித நேயத்துடன், பரோபகார சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

A Man of Clean என்றால் எனக்கு தெரிந்த வகையிலே அது முகத்தார் அவர்களாகத்தான் இருக்க முடியும்.

கலை வெளிப்பாடுகள் வியாபாரமாக விளம்பரத்திற்காக வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த புலம் பெயர் மண்ணிலே தனது திறமைகளை எதுவித எதிர்பார்ப்பும் இன்றி படைத்துக் கொண்டிருக்கும் திரு. முகத்தார் எஸ். யேசுறட்ணம் அவர்கள் இன்னமும் பல்லாண்டு வாழ்ந்து கலைப்பணியாற்ற வேண்டும் என வேண்டி வாழ்த்துகிக்றேன்.

**கோவை நந்தன்**


படிப்பகம்

www.padippakam.com

# முகத்தார் கலை முகங்களின் முன்னுதாரணம்

நடிகன் என்பவன் மனித உள்ளங்களுக்கு ரசனையைத் தருபவன். மகிழ்ச்சியைக் கொடுப்பவன் என்ற நிலையில் நின்று விலகி நடிகன் இன்று உண்மைகளை மக்களுக்கு கற்பிக்கும் ஆசானாக உயர்ந்து நிற்கின்றான்.

மனித உள்ளங்களின் உணர்வுகளுக்கு அவன் தன் நடிப்பால் வடிவம் கொடுக்கும் பொழுது மனித மனங்களைத் தன்மீது ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொள்வது மட்டுமன்றி ஒரு வடிவமாக, ஒரு உயர்வின் ஊடகமாக மக்கள் மனங்களில் பதிவு பெறுகின்றான்.

நாடகம், நடிப்புக்கலை என்பது இன்று பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களுக்கும் ஆய்வுக்களுக்கும் உட்படுத்தப்பட்டு பல்கலைக் கழகங்களில் படிப்பிக்கப்படவேண்டிய சமூக விஞ்ஞானமாக உயர்ந்து நிற்கின்றது.

இத்தகைய பெருமைக்குரிய நடிப்புக் கலையை தன் உயிரினிலும் மேலாக மதித்து வாழ்பவர் முகத்தார் அவர்கள். மக்களைச் சிரிக்க வைத்து தனக்கென்ற தனி வடிவமாக அவர் வெளிப்படுத்திய உணர்வின் வெளிப்பாடுகள் உண்மைகள் தெரிந்திருக்கா தமிழ் மக்கள் இல்லை என்றால் அது மிகையாகாது.

இன்னும் சொல்வதானால் இறைவனின் ஒரு வடிவம்தான் கலைஞன் என்பார்கள் அறிஞர்கள்.

இது உண்மை. பொய்யல்ல என்பதற்கு 'முகத்தார்' ஒருவர் போதும் உதாரணம் சொல்வதற்கு.

இத்தகைய கலைஞனின் நட்புக் கிடைத்தது அடியேன் பெற்ற பாக்கியமே. முகத்தார் 'கலைமகனை' இம்மலரில் வாழ்த்தும் பேறு பெற்றதால் கலைத்தாகம் கொண்ட அடியேன் எனக்குத்தான் பெருமை சேர்ந்ததாக எண்ணி மகிழ்கின்றேன். 'கலைமுகம்'களின் முன்னுதாரணமே 'முகத்தார்' நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழவேண்டும். வாழ்வீர்கள்

வாழ்த்துக்களுடன்
**எம். அரியநாயகம்**


படிப்பகம்

www.padippakam.com

# முகத்தார் ஜேசுறட்ணம் பற்றி......

யேசுவே சரணம் என்று பெயரை உச்சரித்த உடனேயே பரவச நிலையை அடையும் பக்தர்கள் பாரினிலே அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர் துதி பாடி, அவர் பாதம் பற்றி பலன் அடைந்த பலர், அவரை நினைத்த மாத்திரத்திலேயே உணர்ச்சிப் பெருக்கெடுத்து உள்ளம் பெருகி கண்ணீர் மல்கி நிற்பதையும் நான் கண்டிருக்கிறேன். ஆனால் அதையும் விட மேலாக என் அன்பு நண்பர் இனிய நண்பர் யேசுறட்ணத்தை யேசு என்று அழைப்பதன் வழிஅன்பு, பாசம், பரிவு, அறிவு என்றால் என்ன என்ற அர்த்தத்தை அடியேன் புரிந்து கொண்டிருக்கிறேன்.

"கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற வாக்கு பொய்யாகாத வண்ணம் எவர் எதைக் கேட்டாலும், அதாவது நாடகமாக இருந்தாலும் சரி, நடிப்பதாக இருந்தாலும் சரி, இல்லை பேசுவதாக இருந்தாலும் சரி, நகைச்சுவையாக பாடுவதாக இருந்தாலும் சரி, முகம் சலிக்காமல், அகமகிழ்ச்சியோடு எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் அற்புதமான பண்பு, ரத்தினமான யேசுவிடம் இருக்கின்றது. நாடகத்தை நடிப்பை கல்லூரியில் படித்து, நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் வருபவர்கள் சிலர், நாடகத்தைப் படியாமல் அறிவுத்திறனால், அனுபவத்தாலும் நாடக ஆசிரியனாக நடிகனாக ஆனவர்தான் யேசு.

எந்த ஒரு நாடக ஆசிரியனோ அல்லது நடிகனோ, தன் அறிவை நாட்டு அகத்தோடும், நாட்டு நடப்போடும் செலுத்தாமலிரான், நாட்டு நடப்போடு தன் அறிவைச் செலுத்தி முகத்தார் யேசுறட்ணமாகி, இன்று கலைமாமணி ஆகிவிட்டாரா? சந்தோஷம்.

யேசுவிற்கு இயல்பாக அமைந்த கருவியே கற்பனை என்னும் ஆற்றல் மிகு சக்தி இவரது நோக்கு பிறர் நோக்கினின்றும் வேறுபட்டது. பெரும் பாலும் இவரது நோக்கு உலகத்தின் மேல் கொண்ட பாசம், பரிவு, என்ற பண்பினைக் கொண்டதாகும். ஆகவே கலைமாமணி யேசுறட்ணம், தோன்றி - தோன்றியதை வெளிப்படுத்த, தூண்டி - தூண்டிய உணர்வைச் செயலாக்க முனைந்து வெற்றி கண்டுள்ளது யேசுவின் மனிதப்பண்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.

வாழ்க யேசு வளர்க நாடகக்கலை
சாயிராம் அன்பே சிவம்.

இவ்வண்ணம்
சங்கீத பூஷணம்.

M.A. **குலசீலநாதன்.**



படிப்பகம்

www.padippakam.com

S.K.PANCHARATNAM
(MUSIC PROFESSOR)
38, Bd. VOLTAIRE 75011 Paris
Tel: 01 43 38 45 38
**Mobil: 06 11 18 34 84**

# முகத்தார் வீடு

இலங்கையில் இளைஞனாக இசைப்பணிக்குள் என்னை நுழைத்துக் கொண்ட அந்த நாட்கள்

ஈழத்துக் கலைஞர்கள் இலங்கை வானொலியில் ரசிகர்களாக இருந்தே ஆகவேண்டும்.

வானொலியைக் கேட்போம் வானொலியில் பங்களிக்கும் காலத்தைக் கனவு காண்போம்.

அப்படித்தான் கிராமிய நிகழ்ச்சியில் தற்செயலாகக் கேட்ட முகத்தார் வீடு அதன் கிராமிய மணம் பேச்சு வழக்குச் சொற்கள் ஹாசியச் சுவை தொடர்ந்து கேட்க வைத்தது அது ஐந்து வருடங்கள் என்று முடிந்தபின் தான் தெரிந்தது. எழுதி முகத்தாராக நடித்தவர் யேசுறட்ணம் என்பது கேள்வி பார்க்க ஆசைதான் ஆனால் கிடைக்கவில்லை

பாரிஸ் வந்துவிட்டேன்.

இசை என்னை எடுத்துக் கொண்டது திடீரென ஒருநாள் - என் முன் ஒரு புது உருவம் நிமிர்ந்த மீசை சிரித்தமுகம் தெளிந்த பார்வை.

"பஞ்சர்" இவர் தான் ஜேசுறட்ணம்! அறிமுகப்படுத்தியவர் இரா.குணபாலன் கூட எஸ்.கே.ராஜன் ரகுநாதன் அண்ணர்.

இவரது கதையைத்தான் "முகத்தார் வீடு" கதையைத்தான் படமாக்கப் போறம்.

ரகு அண்ணன் தான் இயக்குனர். நீங்கள் தான் இசை.

எனக்கு இன்ப அதிர்ச்சி

பார்க்க விரும்பிய - நான் ரசித்த பெருங்கலைஞர் என் கண்முன்னே என் தொழில் இணைப்புடன்.

பிறகென்ன பணிபுரிந்தோம். பழகினோம்.

இத்தனை பெரியகலைஞர் - இவ்வளவு அடக்கமா?

அன்புக்கு மறுபெயர் யேசு (ரட்ணம்)

இன்று கலைமாமணி.

பாராட்டுகிறேன்.
வாழ்த்துகிறேன்.
நீடுழிவாழ்க!

அன்புடன்
**இசையரசு எஸ்.கே.பஞ்**



படிப்பகம்

www.padippakam.com

# பாரிஸ் இளைய நிலா

## இளமையின் ரகசியம்....

வாழ்த்துகின்றது இளையநிலா
இந்த வாழ்த்திற்கு சொந்தக்காரர் எங்கள்
முகத்தார் யேசுறட்ணம் அண்ணர்
விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்து
உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும்
இந்த கணனியுக காலத்தில் நாம்
மின்சாரத்தின் துணையோடு தான்
இசையை இன்னும் இளமையாக்கி
இனிமையாக்கி வழங்குகின்றோம்
அண்ணா! நீங்கள் எப்படி சுயமாகவே
கலைத்துறையில் என்றென்றும்
குரலிலும் முகத்திலும் நடிப்பிலும்
இளமையை இணைத்துக் கொள்கின்றீர்கள்
அந்த ரகசியத்தை எங்களுக்கும் சொல்லித் தந்து
எங்களையும் கலைஞனாக்குங்கள்
இந்தக் கலைத்துறை வளர
உங்கள் கலைப்பணி
மீண்டும் மீண்டும் வேண்டும்
அதற்காய் நீங்கள் பல்லாண்டு வாழவேண்டும்

வாழ்த்துகின்றது
பாரிஸ் இளையநிலா

இயக்குனர்
**எம். குருநாதன்.**


படிப்பகம்

www.padippakam.com

# முகத்தார் என்ற போதினிலே...

முகத்தார்: எடியே அறுந்துபோவான் உன்ர தம்பி எங்கையடி போட்டான்
மனைவி: ஏனப்பா அவனைத் திட்டிறியள் என்ன செய்து போட்டான்
சரவணை: அத்தார்........என்னைக் கூப்பிட்டனியளே
முகத்தார்: டே .... பரதேசி மாட்டைக் கொண்டுபோய் எங்கையடா கட்டினனி
சரவணை: நீங்கள் தானே சொன்னீங்கள் பசுமையான இடத்தில் கட்டச்சொல்லி
முகத்தார்: எடே பசுமையான இடமெண்டால் பயித்தங்கொடியாடா உனக்குத் தெரிஞ்சது................

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வானொலியில் விவசாய நிகழ்ச்சியில் ஒலித்த "முகத்தார் வீடு" என்ற நகைச்சுவை நாடகத்தின் ஒரு பகுதியை இன்றுகூட இரைமீட்டுப் பார்க்கிறேன். அண்ணன் ஜேசுறட்ணம் இப்படி ஒன்று இரண்டல்ல பல நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதி மேடையேற்றி தானும் நடித்திருக்கிறார்.

எந்தவொரு படைப்பிலக்கியங்களும் ஆக்கப்பட்டு அவை அரங்கேற்றப்பட்டு, மக்களைச் சென்றடைந்து மக்களால் அவை ஏற்றுக்கொள்ளப்படும் போதுதான் அவற்றுக்கான காத்திரமும், சமூக அந்தஸ்தும் கிடைக்கின்றன. இந்த வகையில் முகத்தார் என்று அன்பாக அனைவராலும் அழைக்கப்படும் அண்ணனின் படைப்பிலக்கியங்கள் இலங்கை, இந்தியா மட்டுமல்லாது உலகில் எங்கெல்லாம் தமிழ் உணர்வு கொண்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ரசிக்கப் படுகின்றன. போற்றப்படுகின்றன, மதிக்கப்படுகின்றன.

எப்போது "முகத்தார் வீடு" நிகழ்ச்சி தொடங்கும் என்ற நம்பிக்கையுடன் வானொலியை அரவணைத்துக் கொண்டிருக்கும் ரசிகர்களின் நம்பிக்கை வீண்போவதில்லை காரணம் இவரின் படைப்புக்களில் எடுத்துக்கொண்ட கருப்பொருள் சொல்லப்படும் முறை துணைநடிகர்களை வைத்து இயக்கும் முறை என்பனவாகும் இதைவிட இவரின் நாடகங்களைக் கேட்கும் ரசிகர்களை நிஜவாழ்க்கைக்கு அண்ணன் இழுத்துச் சென்றுவிடுவார். இன்று அல்லது நேற்று அயல் வீடுகளில் அல்லது அயல் கிராமத்தில் அல்லது தங்கள் வீட்டில் தாங்கள் கண்ட அல்லது அனுபவித்த விடயம் எப்படி வானொலிக்குச் சென்றது என்ற ஆச்சரியத்தையும் ரசிகர்களுக்கு ஏற்படுத்தி விடுவார்.

அந்தளவிற்கு கிராமப்புறமாக இருந்தாலும் சரி, நகர்ப்புறமானாலும் சரி தான் கண்டவற்றை அனுபவித்தனவற்றை யதார்த்தமாக எழுதி நகைச்சுவையூட்டி நாடகங்களாக்கி மக்களிடம் கையளிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான்.

பல ஆண்டுகளாக அண்ணன் ஜேசுறட்ணம் அவரை வானொலி குரல்வழி ரசிகனாகக் கண்டுவந்தேன் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது ஒரு சராசரி மனிதனாகத் தானாகவே முன்வந்து என்னிடம் குசலம் விசாரித்து ஐக்கியமாகிக் கொண்டார். இவ்வாறு எளிமையாக தனது வாழ்க்கையை மக்களுடனும் சமுதாயத்துடனும் இணைத்துக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்திற்கு தனது கலைப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவரும் அண்ணனை எம்மவர்கள் கௌரவிப்பது சாலவும் பொருத்தமாகும். அவருக்கு பட்டங்கள் வழங்கி போற்றப்படும் இவ்வேளையில் எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பூநகரி சதா. இராமகிருஷ்ணன்**


படிப்பகம்

www.padippakam.com

# நந்தினி கலை தென்றல்

## கலை நிலாவிற்கு அல்லிப்பூவின் ஆராதனைகள்

கலை வானிலே உலா வரும் யேசு எனும் இந் நிலா
விழாகாணும் இவ் இனிய வேளையிலே
உலா விடுகின்றேன், உம் புகழ் பாடும் என் கவிதை தனை - இது
நிலா கண்டு மலரும் அல்லிப்பூவின் ஆராதனை.

முத்துநிறை கடல் சூழ்ந்த, சிறுதீவாம் இலங்கையிலே
எத்திசையில் நின்றாலும் எதிரொலிக்கும் வானொலியூடாய்
சிந்து விளையாடல் செய்து எண்ணற்றோர் மனம் புகுந்து - தன் குரலால்
வித்தைகள் பல புரிந்து வெற்றிகள் பல படைத்த
பெரும் கலைஞர் ஒருவர்க்கு - கலை
பித்தர்கள் சிலரால் பாராட்டும் விழா இது
கற்றோரும் கலைஞர்களும் உற்றாரும் கூடியிங்கு - இவர்
வெற்றியிலே தாமும் திளைத்திருக்கும் இவ் வேளையிலே
இலக்கிய சொற்களின் இனிய நற் கவிதை மூலம்
கலைஞரே உம்மை இங்கு கருத்துடன் உலவ விட்டு
விலையில்லா உம் தொண்டை விரித்து நான் கூறவந்தேன்
மலையென உயர்ந்தவர் நீர் !
கலையுலகில் மலையென உயர்ந்தவர் நீர்!
நடிப்பெனும் புதையல் நீர் - இன்னமும்
துடிப்பான இளைஞர் நீர்!
உம்மை காதலிப்பவர்கள் இன்னமும் நிறையவே உண்டு
நானும் அதில் ஒன்று
சின்னவன் நான் உம்மை வாழ்த்த வயது போதாது - நீரோ
கலை மன்னவன் !
ஆதாலால் வாழ்த்தும் கடமையும் உண்டு - இந்த வாழ்த்து
இச்சிறு கவிஞனின் கப்பம் அல்ல! - காணிக்கை
களங்கமில்லா மனத்தோடு தருகின்றேன்
ஏற்றிடுங்கள் கலை மன்னவா

வானில் தோன்றும் முழு மதிபோல் - இள
வாழையின் செழுமை உள்ள இன் முகம்.
கானில் உறையும் குயில் இனம் போல் - வலக்
கன்னத்தில் அழகான மச்சம் ஒன்று
ஆனைக்கு முகத்தினிலே தும்பிக்கை கட்டியம் கூறும்
இக்கலையானைக்கு முகத்தினிலே சிங்க மீசை
பேனா முனையால் சிந்தும் மைத்துளி போல் - இடக்
கண்ணின் கீழ் கரும் புள்ளியொன்று
எவர் மனமும் கோணாத புன் சிரிப்பு
தினமும் அது உண்டு!
பாய் போன்ற பரந்த மார்பு - மீண்டும்
பார்க்க தூண்டும் இரு தோள்கள்
காய் போன்ற இனிய கண்கள்
கவர்ச்சியான கனிகொள் பார்வை
வாய்விட்டுச்சொல்கின்றேன்
வளர்பிறை எங்கள் யேசு அண்ணன் - எங்கள்
முகத்தாரின் முக அழகை கூற - என்னிடம்
இதற்கு மேல் வார்த்தையில்லை



படிப்பகம்

www.padippakam.com

மாசு மறுவற்ற மரிக்கொழுந்து எங்கள் அண்ணன் - ஒரு
தூசளவு களங்கம் கூட இவர் மீது இன்றளவும் இல்லை
ஏசுபவர் - பேசுபவர் - சண்டித்தனம் புரிபவர்கள் எல்லாம்
யேசுவின் முகம் பார்த்தால் சாது ஆவார் இது உண்மை

பல தொழில் இருந்தும் கலையின் ஆர்வத்தால்
பலன் எதையும் எதிர் பாராது எம்மோடு இணைந்து நின்று
விலை மதிப்பில்லா தன் நடிப்பை மட்டும் பரிசாக எமக்களித்து
நிலையாக என்றும் உயர்பாக நிற்பவர் - எங்கள்

❍ கலைமுரசு யேசு அண்ணன்
நகைச்சுவை மட்டுல்ல முகத்தினில் உணர்ச்சியை காட்டும்
நயமுடை நடிப்பிற்கும் தகையுடைய இம் மேலார் சளைத்தவர் அல்ல
❍ பருவக்காற்று ❍ கதம்பமாய் இனிக்க ❍ முகத்தர் வீட்டோடு
❍ யூலியசீசர் ஜொலிக்க இதுவன்றோ ❍ குதுாகலம் - இவன்
❍ வெனிசிய நகரத்து வர்த்தகன். ❍ தேர் திருவிழா கண்டவன்.
❍ பந்தமும் பாசமும் விட்டு போகுமா? ❍ கறுப்பும் சிவப்பும் கலந்த உன்னை
❍ ஆசைமச்சான் என்றவள் நாடி வர ❍ அசட்டு மாப்பிள்ளையாக நீயிருக்க
❍ பாசச் சுமையோடு பெற்றோர்கள் உனை வாழ்த்த
❍ நம்பிக்கையோடு வாழ்க்கையில் புகுந்தவனே
❍ லண்டன் மாப்பிள்ளைக்கு ஏங்காத அந்த
❍ மாடிவீட்டு மருக்கொழுந்து உன்னோடு வாழ்ந்து
❍ மண்ணோடு விளையாடும் விண்ணுலகமும் கண்டாள்
வெளிநாட்டு ஆசை ஆரைத்தான் விட்டது
❍ கோப்பாயில் இருந்து டுபாய் வரை போக ஆசைப்பட்டு
❍ போச்சடி பத்தாயிரம் என புலம்பினாய் - பின்
❍ சண்டியன் சின்னத்தம்பியாய் மாறி விட்டபணத்தை எடுத்து
❍ கராச்சியில் இருந்து கட்டார் வரை சென்றாய் - நீ
❍ கோமாளியாய் வந்து எம்மை ஏமாளியுமாய் ஆக்கினாய்
அடித்த ❍ வாடைக்காற்றில் நீ அடிபட்டு போய் விட வில்லை!
இவையெல்லாம் உன் ❍ நம்பிக்கைக்கு சாட்சி
இவற்றை கருத்தில் கொண்டே ❍ ஜனாதிபதி விருதும் உம்மை நாடி வந்ததோ?
❍ விவசாய மன்னன் என்ற பட்டம் பெற்றதெப்படி - நீர்
வயலிற்க்குள் இறங்கியதை கண்டதென கூட யாருமே சொன்னதில்லையே - ஓ!
கலை வயலிற்க்குள் இறங்கி கலப்பையாய் நீர் நின்று
பெரும் அறுவடைகள் செய்வதினால் இப்பட்டம் உமை நாடி வந்ததோ?
முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விஸ்நாதம் அவர்களும்மை
❍ கலைப்பணிச்செல்வர் என்ற பட்டம் தந்து வாழ்த்தினாராமே
எத்தனை கௌரவம் உமக்கு ! அத்தனையும் மறைத்து வைத்து - வெறும்
பித்தனை போல் இருப்பீரே! - ஏன்? .. ஓ
நீர் யேசு + இரத்தினம் அதனால் தானோ?

உழுத வயல் காயாத இளவாலை மண்ணில்
செழுமையாக வாழ்ந்த சந்தியாப்பிள்ளை தம்பதிகட்கு
தந்தை பேர் சொல்ல தனயனாய் பிறந்தீர்
தனிக்காட்டு ராஜாவாய் செல்லமாய் வளர்ந்தீர்
தந்தையின் பெயரைத்தான் பிள்ளைகள் - தம்
முன்னெழுத்தாய் கொள்வார்கள்
என்ன விந்தை இது! அண்ணன் ஜேசுறட்ணம்
தன் பிள்ளையின் பெயரை
முன்னெழுத்தாய் கொண்ட விந்தையென்ன?
ஐயா சந்தியாப்பிள்ளையே! உம் பிள்ளை
தான் பெற்ற பிள்ளைகளில் ஒன்றான
முகத்தாரை முன் வைத்து


படிப்பகம்

www.padippakam.com

முகத்தார் ஜேசுறட்ணமாகிய விந்தையைப் பார்த்திரா?

இந்தக் கலைஞர்களே இப்படித்தான்.......
இந்தக் கலைஞர்களே இப்படித்தான்.....
புகழின் உச்சிக்கு வந்துவிட்டால்
பட்டப் பெயர்தான் ஒட்டிக்கொள்ளும்
நல்லவேளை - அண்ணன்
சண்டியன் ஜேசுறட்ணம் என்று பெயரெடுக்கவில்லை
அந்த மட்டில் எமக்கும் மகிழ்ச்சி - உங்கள தந்தை
சந்தியாப்பிள்ளைக்கும் மகிழ்ச்சி

பொத்தான்கள் பூட்டாத அரைக்காற்சட்டையோடு
நான் ஓடி விளையாடிய காலம் அது - ஓர்
மட்டான வயதெனக்கு
சிட்டாகப் பறந்து விளையாடும் நேரத்திலும்
கட்டாயம் சனியன்று வானொலியைத் தேடிடுவேன் - ஏன்?
எட்டாத தூரத்தில் இருந்தெம்மை மகிழ்வித்த நாடகமாம்
சண்டியன் சின்னத்தம்பியின் சண்டித்தனம் கேட்க
இன்றும் எவரும் எட்டாத தூரத்தில் முகத்தார் வீடு
ஐந்தரை வருடமென்ன வந்துமறையும் நாட்களா?
இவ் விந்தியத்தில் எம்மால் நினைக்கவே முடியவில்லை
அண்ணனே! கலை மன்னனே! என்னுள் ஒரு சந்தேகம் - ஏன்
கின்னஸில் இச்சாதனை பதியப்படவில்லை......?
கின்னஸ் என்ன கின்னஸ்!
ஆயிரம் ஆயிரம் ரசிகர்களின் மன எண்ணங்களில் பதிந்தமையால்
அதனையே கின்னஸ் என எண்ணிக் கொண்டீரோ? - நீர்
நாற்பது வருடங்கள் தாண்டி கலைப்பணி புரிவதும்
நாடுவிட்டு நாடு வந்தும் நாற்பதும் இருபத்தைந்தும்
தாண்டிய போதிலும் கலைப்பணி புரிவதும்
சாதனைதானே!
நாங்களும் ஏதாவது சாதிக்கலாம் என்றால்
நீங்கள் விட்டால்தானே! விட்டுவிடுங்கள்!
உங்கள் பணியைத் தொடர ஒரு வாரிசை
உருவாக்கி விட்டு விடுங்கள்
முகத்தார் தான் எம் குரு என்று சொல்ல - நல்ல
கலைஞர்களை உருவாக்கி விட்டுவிடுங்கள்
உங்கள் படைப்புக்களை நாங்களும் நடிப்பதற்காய்
அவற்றை பொது சொத்தாய் விட்டுவிடுங்கள்
கலைப் பணியை மட்டும் விட்டாதீர்கள்!
ஆசையை வளர்த்து நாமும் அடைந்தோம் பெரும் நடிகன் ஆக
பாசமோ கலையின் மீது படைத்தவன் செயலோ இது
நாசமாய்ப் போன நானும் கலையால் அழிந்ததுண்டு - வளர்ந்ததில்லை
ஆசை இன்னும் அழியவில்லை! இந்த தேசம் என்னை வாழ்த் வேண்டும்
ஆண்டவனே அதற்காய் அண்ணன் ஜேசுறட்ணம் போல் என்னை மாற்று

நன்றி
**வண்ணை தெய்வம்**
நந்தினி கலைத்தென்றல்

*18.08.1995 வெள்ளியன்று பாரிஸ் கலைக்கோயில் அண்ணன் ஜேசுறட்ணம் அவர்களுக்கு நடாத்திய பாராட்டு விழாவில் பாடிய பாமாலையை இங்கு மீண்டும் சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.*


படிப்பகம்

www.padippakam.com

# சிரஞ்சீவி முகத்தார்

கலைகளைக் கண்ணாய் மதித்து நயம்பட
கலையாத நெஞ்சுடன் களம்பல கண்ட
கலைஞனாம் இளைவையூர் ஈர்ந்திட்ட
கலைமாமணி முகத்தார் வாழ்வாரே வளமுடன்.

பட்டங்கள் பலவே பெற்று பைந்தமிழ்(ப்)
பெருமை சாற்றி பாரெங்கும் நலமேவ
மொட்டரும்பு விரிவது போல் அண்ணல்
மெய்யுயர்த்தி வாழ்வாரே வளமுடன்.

பொன்னும் பொருளையும் யேசுபுகழையும்
பொய்யே என்றுரைத்து உழைப்பின் நிகரின்
மின்னும் கலைஞனாம் இயேசுவே ரத்தினத்தார்
மனமதே மாளிகையாய் வாழ்வாரே வளமுடன்

ஆயிரம் எண்ணங்கள் அத்தனையும் முத்துக்கள்
அள்ளநாம் பருகுவதற்காய் அன்னை தந்த
பாயிரமாம், எத்தனை இடர் வரினும்
இரும்புருவாய் வாழ்வே வளமுடன்.

காலனைக் காலால் உதைத்திட்ட உயிராம்
கடைசி வரையிலும் கீழ்படிதலில்லா தான்
காலத்தை வென்ற காவியக் கனவான்
கலச நாயகனாய் வாழ்வாரே வளமுடன்

தெள்ளு தமிழ் நடை, தெளிவே உரைநடை
தீரமாய் மிளிர்ந்திடும் நற்குண நடை
அள்ளி எடுக்கும் வசீகர கண்நடை
அத்தனையுமகலாமல் வாழ்வாரே வளமுடன்.

மன்றிடை ஆடிடும் கான மயிலானாற்போல்
மோனம் கலைத்து இதயம் வெடிக்கவே
குன்றிடை வெடியாய் சிரிப்பொலியெய்து
குவலயம் மகிழ வாழ்வாரே வளமுடன்.

விரிந்த வானின் வெளியிடை யெங்கனும்
வானொலி அலையில் மிதக்கும் மன்னன்
சொரிந்த சிந்தனையில் சிந்திக்க வைத்த
சீமான் முகத்தார் வாழ்வாரே வளமுடன்.

**- சிவலிங்கம் சிவபாலன்.**


படிப்பகம்

www.padippakam.com

# அவர் ஆளுமையில் நானும்...

எனது சிறுவயது முதல் இலங்கை வானொலியில் நான் கேட்டுப் பழகிவந்த குரலுக்குரிய சொந்தக்காரருக்கு நான் இன்று வாழ்த்துரை வழங்குவது எனக்கு பேருவகை மாத்திரமின்றி பெரு வியப்பாகவும் இருக்கிறது.

அது மாத்திரமல்ல. இக்குரலுக்குரியவருடன் சேர்ந்தும். அவரது ஆளுமையின் கீழும் நான் கலைப் பங்களிப்புக்களைச் செய்ய நேர்ந்ததென்பது எனது அதிர்ஸ்டம் எனக்குக் காட்டிய ஒரு பக்க எல்லைக் கோடு.

குறளை வெறுமனே படிப்பதில் பயனில்லை. படித்துப் பொருள் தெரிந்து கொண்டபின், வாழ்க்கைக்கு அதன் தேவை எத்தகையது என்று எப்படி உணர்கிறோமோ, அதுபோல இம்மாமனிதருடன் பழகியவர்கள் உணர்கிறார்கள் - உணர்வார்கள்.

கலை மக்களிற்கானது - மக்களின் அன்றாட பிரச்சனைகளுக்கு அரு மருந்தாக அமைவது - மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வினைக் கொடுக்கக்கூடிய கலைஞனே மக்கள் மனதில் நிற்கிறான். மாறாக மேதாவித்தினம் காட்ட விழைபவர்கள் நிராகரிக்கப்படுகிறார்கள்.

எனவேதான் மக்கள் கலைஞனை 'கலைமாமணி' முகத்தார் யேசுறட்ணம் அவர்களை வாழ்த்துவதிலும் மேலாக, அவரை இனங்கண்டு அவரைப் பெருமைப் படுத்தியவர்களை வாழ்த்துவதிலும் நான் பேருவகை கொள்கிறேன்.

நன்றி
தோழமையுடன்
**ச. சுரேந்திரன்**



படிப்பகம்

www.padippakam.com

**PON ARTS ASSOCIATION**

# பொன் கலைக்கூடம்

*(N°.d'enregistrement: 94-10801)*

**Chez:**
கண.பொன்னையா
**Kana.Ponniah**
*13. Rue dézobry*
*93200 - Saint - Denis*
*France*

Tel : (1) 42 43 42 65
Fax: (1) 42 43 86 61

01/03/98

## என்னிலையிலும் தன் நிலைமாறாத கலைஞன்....

கலைகளின் வடிவங்கள் ஆயிரங்களாக மாறிவிட்ட போதும் அக்கலைகளை வெளிப்படுத்தும் தூண்களாக கலைஞர்கள் திகழ்கிறார்கள். கலைவெளிப்பாடுகளின் மூலம் சமூக மாற்றத்தை உருவாக்கத் துடிக்கும் கலைஞர்கள் வரிசையில் எமது எஸ். ஜேசுறட்ணம் அவர்கள் முன் வரிசையில் நிற்கிறார். இவரது கலை வடிவங்கள் வானொலி, நாடக, சினிமா வடிவங்களால் வெளிப்படுகின்றன, மூன்றும் மூன்று விதமான வடிவங்களில்தான் மூன்று விதமான நிலைகளில் இருந்து கொண்டு தனது திறமையால் கலையை அடையாளப் படுத்தினார் என்பது மிகவும் பொருந்தும். முகத்தார் என்ற பெயருடன்தான் எங்கள் கலைக் கூடத்தில் இவர் நுழைந்தார். கலைக்கூடத்தில் "கலை வேள்" என்ற பெயரையும் இணைத்துக் கொண்டார். தன் ஆளுமையை காட்டுவதில் ஒத்துழைப்பு தருவதில் பழகுவதில் அக்கறைத்தன்மை இவையெல்லாம் கலைவழி நிற்போருக்குத் தேவை..

இத்தனையும் கொண்ட ஒருவருடன் நாங்கள் பழகி இருக்கின்றோம். ஒரு மாமலையின் தோளில் நாங்கள் இருக்கிறோம் - இருந்திருக்கிறோம். எங்கள் கலைப்பயணத்தை செலுத்திச்சென்ற தேரோட்டி இவர்.

அவரது கலைச்சேவை இன்று எமக்குத் தேவையாக இருக்கிறது. அவருடன் பழகுவதில் எமக்கு இனிமை இருக்கிறது. அவரது கலைச்சேவை எமக்கு நூலாக அமைகிறது.

அவரது கலைச்சேவை நாளை சரித்திரமாகிறது. ஒரு சரித்திர நாயகனுக்கு எடுக்கப்படும் பராட்டு விழா தான் இது என்ற நினைவே எங்களுக்குள் அந்தச் சரித்திர நாயகனுக்கு கிடைத்த புகழ் மாலைகள் ஏராளம். அத்தோடு "கலைமாமணி" புகழும் இணைந்து கொண்டுள்ளது.

இந்த விருது இவருடன் இணைவதால் பெருமை பெறுகிறது என்றால் அது மிகவும் பொருந்தும். கலைமாமணி விருது அவர் தோளில் ஏறிக் கொண்டுள்ளது .. இவரின் தோளில் பயணம் செய்ய இந்த விருதுக்கு ஆசை...

அவர் தோளைத்தொட பல விருதுகள் ஆசைப்பட்டு ஏறியுள்ளன.. இன்று "கலைமாமணி" விருதும் தன் பயணத்தை தொடங்கியள்ளது. இன்னும் எத்தனை விருதுகள் இவர் தோள்களுக்காக காத்திருக்கின்றனவோ..

வாழும் காலம் மட்டுமே..

எமக்குத் தெரிந்தவை..

தனக்குத் தெரிந்து வாழும் காலத்தில் தன்னை முளுமையாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த மனிதன் .. என்நிலையிலும் தன்னிலை மாறாத மனிதன் இம் மாமனிதன் புகழ் - திறமை- செயல் இவைகளின் அளவு கோலில் இன்று "கலைமாமணி" விருது வரை போற்றப்படுகிறார். அவரது புகழ் வளரவும் கலைப்பணி தொடரவும். எமது இனிய வாழ்த்துக்கள்.

**பொன்மலர்**
செயலர்



படிப்பகம்

www.padippakam.com

# கலைமாமணி முகத்தாருடன் ஒரு நேர் காணல்...

-வியூகன்

கலை வாழ்க்கையில் எதைச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நுழைந்தீர்கள்?

சமூக மாற்றம் தேடி நுழைந்தேன். அதுவும் எனது கலைப்பணி மூலம் ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்து அதன் மூலம் ஒரு நல்ல கட்டுமானமான சமூக அமைப்பை உருவாக்க விரும்பினேன்.

ஒரு கலைஞனின் எதிர்பார்ப்பு எப்படி இருக்கும்?

அவனுடைய படைப்பு, அவனுடைய எழுத்து, அவனது கலையாற்றல் மக்கள் மனதில் போய் பதிந்து இருக்கிறதா? என்பதில்தான் ஒரு கலைஞனின் எதிர்பார்ப்பு இருக்கும்.

பொருளியல் சம்பாத்தியம் இதற்கும் கலைஞனுக்கும்...

பணமும் காசும் கலைஞனுடன் ஒட்டுவதே இல்லை. தான் இறந்தாலும் மக்கள் மத்தியில், நேயர் மத்தியில் நிறைந்து வாழ்கின்றானா? நிரம்பி வாழ்கின்றானா? நிரந்தரமாக வாழ்கின்றானா? என்ற நம்பிக்கை அவனுக்கு கிடைத்துவிட்டால் அதுதான் அவனது சம்பாத்தியம்.

உங்கள் கலை வாழ்க்கை நுழைவுகள் எந்தக் காலத்தில் இடம்பெற்றது?

பள்ளிக் காலம் 1940 - 1949 வரை. பின்பு கொழும்பில் தொழில் புரியும் காலத்தில் வானொலி நாடகங்கள் அத்துடன் மேடை நாடகங்கள்.... பின் சில பல அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியாவில் தமிழ்நாட்டில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இது 1985இல் இருந்து 1993 வரை.

அங்கு என்ன செய்தீர்கள்?

அங்கு ஈழத் தமிழ் அகதிகள் அமைப்பின் செயற்குழு ஒருங்கிணைப்பாளராகப் பணி புரிந்தேன்.

அங்கு உங்கள் கலைப்பணி தொடரவில்லையா?

இரத்தத்தோடு ஊறிய ஒன்றை விடமுடியுமா?

பல நாடகங்கள், கலை நிகழ்ச்சிகளை நடத்தினேன். இதில் புதிய, பழைய நாடகங்களை மேடையேற்றினேன்.

அதில் சிலவற்றை குறிப்பிட முடியுமா?

முடியும். 24.02.1990ல் ஈழத் தமிழ் அகதிகளைக் கொண்ட மாணவர்களை வைத்து 'இளைய ஈழம் சந்திப்பு' என்ற ஒன்றை திருச்சியில் நடாத்தினேன். இதற்கு அமரர் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை வகித்தார். இதில் மௌன நாடகங்கள், நாடகம், வில்லுப்பாட்டு போன்றவற்றை மேடை ஏற்றினேன். பின்பு 01.05.1993ல் ஈழ அகதிகளை வைத்து ஒரு விழா நடாத்தி நாடகம், குறிப்பாக நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, இசைபோன்ற நிகழ்ச்சிகளை நடாத்தினேன். இதற்குத் தலைமை தாங்கிய அமரர் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் முன்னிலையில் 'கலைப்பணிச் செல்வர்' என்ற பட்டத்தை எனக்குத் தந்து கௌரவித்தமை என்னால் மறக்கமுடியாதது.

எப்பொழுது பிரான்சில் நுழைந்தீர்கள்?

1993 வைகாசி 27இல்.

இங்கு உங்களது முதல் கலைத்தொடர்பு எப்படி இருந்தது?

நான் பிரான்சிற்கு வந்ததும் எப்படியோ எனது வருகையைத் தெரிந்து கொண்ட எஸ்.கே. ராஜென் அவர்கள் என்னை முதலில் சந்தித்தார் அவர் மூலம் என் சமகால கலைஞரான ஏ. ரகுநாதன் அவர்களைச் சந்திக்க வைத்து எனது கலைப்பணி பிரான்சில் தொடக்கி வைக்கப்பட்டது.

அதனூடாக பல நாடகங்களை மேடையேற்றியுள்ளேன். அத்துடன் பிறர்களால் மேடையேற்றப்பட்ட நாடகங்களிலும் நடித்துள்ளேன். எனது நாடகங்கள் ஐரோப்பா முழுவதும் மேடை ஏற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உங்களது திரையுலக வாழ்க்கை பற்றி....?

நான் பிறந்த நாட்டில் கோமாளிகள், ஏமாளிகள், வாடைக்காற்று போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளேன்.

பிரான்ஸ் மண்ணில் வந்ததும் திரையுலகம என்ற வகையில் பொன் கலைக்கூடம் தயாரித்த கீழ்கரவை பொன்னையன் அவர்களின் 'சத்திய கீதை' படத்தின் மூலம் வெளிவந்தேன். அதன்பின் பிரியாலயம்



படிப்பகம்

www.padippakam.com

துரைசின் 'ராஜாவின் ராகங்கள்' நடித்தேன். ஆர். ரி. எம். பிறதர்ஸ் இரா. குணபாலன் தயாரித்து ஏ. ரகுநாதன் இயக்கிய 'முகத்தார் வீட்டில்' நடித்துள்ளேன். எஸ். கே. ராஜென் தயாரிப்பில் ஏ. ரகுநாதன் இயக்கத்தில் 'இன்னும் ஒரு பெண்' படத்தில் நடித்துள்ளேன். அதன் பின் மீண்டும் பொன் கலைக்கூடத்தின் 'புயல்' படத்தில் வித்தியாசமான பாத்திரத்தில் நடித்தேன். அதன்பின் அருந்ததியின் 'முகம்' படத்தில் நடித்தேன். பின்பு மீண்டும் கீழ்கரவை பொன்னையாவின் 'மனச் சிறை'யில் நடித்துள்ளேன். இப்படம் வெகுவிரைவில் வெளிவர இருக்கிறது.

ஐரோப்பிய மண்ணில் உங்களது வானொலியில் கலைச் சேவை பற்றி.....!

ஐரோப்பிய மண்ணில் பல வானொலிச் சேவைகள் உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் 'தமிழமுதம்' வானொலி (எஸ்.கே. ராஜனால் நடாத்தப்பட்டது) யில் 'அந்தநாள் ஞாபகம்' என்ற எனது நாடகம் ஒலிபரப்பாக்கப்பட்டு இன்று இது ஐ.பி.சியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது.

பின், பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஒலி (ரேடியோ ஏசியா) யில் எனது வானொலி சேவை இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் குமார் சொப் நிறுவனர்களுக்காக 'செல்லப்பா' என்ற தொடர் செய்து கொண்டிருக்கிறேன். பின் ஞாயிறு ஜேர்மனி ரி.ரி.எஸ். பிறதர்ஸ் நிறுவனத்தினர்க்காக 'பரலோகத்தில்' என்னும் தொடர் செய்து கொண்டிருக்கின்றேன். இதைவிட பல நாடகங்கள்... எண்ணிக்கையை நான் வைத்துக் கொள்ளவில்லை.

எழுத்து, நடிப்பு, இயக்கம், இவை பற்றி?

நடிப்பது சுலபம்.

எழுதுவது அதைவிடக் கஷ்டம்.

இயக்குவது மிக மிகக் கஷ்டம்.

படைப்பின்அடிப்படை நோக்கம்?

சிந்தனைத் தூண்டல்

அதைச் செயல்படுத்தல்.

உங்களது சமகாலக் கலைஞர்கள் பற்றி?

அப்புக்குட்டி ராஜகோபால் எனது சமகால கலைஞரில் ஒருவர். எத்தனை வானொலி - மேடை நாடகங்களில் இணைந்திருப்போம்.

எங்களது திரைப்பட நுழைவாசல் திரு. ஏ. ரகுநாதன் அவருடன் இணைந்து நடித்தது. அவருடன் இயக்கத்தில் நான் நடித்தது மறக்க முடியாதது.

யாருடைய இயக்கத்தில் அதிக கவனம் செலுத்தினீர்கள்?

எல்லாருடைய இயக்கத்திலும் எனது கவனம் அதிகம் இருந்தது. ஒவ்வொரு இயக்குனரும் கையாளும் பாணி வித்தியாசமானதுதான். ஆனாலும் கீழ்கரவை பொன்னையனின் இயக்கத்தில் நடிக்கும்போது அதிக கஷ்டம் எனக்குத் தெரிந்தது. என் வயதையும் பார்க்காமல் தன் திருப்தி வரும்வரை நடிக்க வைத்துக்கொண்டே இருப்பார்.

இங்குள்ள கலைஞர்கள் பற்றி?

தரமான, திறமையான கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரிந்திருக்கிறார்கள்.

அப்போ அவர்களுக்கு உங்களது அறிவுரை?

கலைஞன் பிரிவுபடக் கூடாது. கலைஞன் என்பவன் பொதுச் சொத்து. அவனை இருளை துகளாக்கி அந்தப் பக்கம் நில் இந்தப் பக்கம் நில் என்று இடிப்பது தவறு. அவனைச் சுதந்திரமாக இயங்கவிடவேண்டும். அவனது சுதந்திரத்திற்கு தண்டனை கொடுக்க முனையக் கூடாது.

என்னைப் பொறுத்தவரை நான் எல்லாரையும் நேசிக்கிறேன். எல்லாரும் எனக்கு ஒன்றுதான்.

ஆக்க பூர்வமான விமர்சனத்தை விரும்புகிறேன்.

இங்குள்ள விமர்சனங்கள் பற்றி?

அவர்களது பார்வையில் தரும் விமர்சனமாக ஏற்பதுடன் அதைத் தனது அடுத்த படைப்புக்கு ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

கலை கலைக்காக. கலை மக்களுக்காக என்பது பற்றி?

இது ஒரு வாய்ப்பாடுதான்.

இப்போது கலை அரசியலுக்காக.



படிப்பகம்

# நான் 'மரணம்' அடைந்தும் மகள் கதறி அழுதாள்!

**வானொலி மேடை நடிகர்களின் பேட்டி!**



ஜேசுரட்ணம்

அந்த நாடகத்தில் [illegible]

'கூண்டுக்கு வெளியே' நாடகத்தில் தோன்றும் தரகர் தம்பையா, 'பாசச் சுமை'யில் வரும் கோடீஸ்வரர் தாமோதரம்பிள்ளை, 'அசட்டு மாப்பிள்ளை'யில்தோன்றும்சிங்கப்பூர்'பென்ஷனியர் மார்க்கண்டர்' ஆகிய பாத்திரங்களை ரசிகர்கள் மறந்திருக்கமுடியாது.

ஆஜானுபாகுவான தோற்றமும், குரல்வளமும் கொண்ட வானொலி நடிகரும், மேடை நடிகருமான எஸ். ஜேசுரட்ணம்தான் மேற்படி பாத்திரங்களை ஏற்று நடித்தவராகும்.

நூற்றுக்கணக்கான வானொலி நாடகங்களை எழுதியிருக்கும் வர், தம்மை கே. எம். வாசகரின் மாணவர் என்கிறார்.

வானொலியில் ஒலிபரப்பான'வாழப் பிறந்தவர்கள்', 'அலைகளின் குமுறல்', 'மனிதவலை', 'வர்க்கப் பறவைகள்', 'தக்காளிப் பழங்கள்' ஆகிய நாடகங்கள் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன.

இவர் எழுதிப் புகழ்பெற உதவியவை நிர்த்த யாத்திரை, [illegible]

டது'' என்று கூறியபடி தள்ளாடி, மறுபடியும் கூனல் நிலைக்கு என்னை மாற்றிக் கொண்டேன்.

சிரித்தவர்கள், நான் பேசியது நாடக வசனமென்று வாயடைத்து நின்றார்கள். அதைப் பார்த்த நான் காட்சியோடு சேர்த்து பலமாகச் சிரித்தேன். ஆத்திரத்தில், சந்தோஷத்தில் சிரித்தேன். அதேவேளை வந்ததே ஆபத்து கறுப்பு நிற பொக்கைவாய்ப் பற்களுக்கு!

உடனே முந்திக்கொண்டேன். ''டேய் தம்பிகளா! கூன் விழுந்த கிழவன் கோபம் வந்தால் நிமிருவான். இங்கே

## ஓ! அந்த நிகழ்ச்சி!! என்னால் மறக்க முடியாது!

பாருங்கடா! நான் பல்லையும் கட்டிக்கிட்டுத்தான் சிரிக்கிறேன்'' என்றேன். வந்த ஆபத்துக்களை நான் சமாளித்துவிட்டாலும், ஒத்திகையின்போது [illegible] வைப்பாது இருந்த நண்பர்கள், தான் [illegible]

பிள்ளையைச் சமாளியுங்கள்? என்று கத்தத் தொடங்கிவிட்டார்கள். பிறகு ஒருமாதிரியாகச் சமாளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை என்னால் என்றுமே மறக்கமுடியாது. ஏனென்றால் நாடகத்தின் பெயரும் 'பாசச்சுமை'. நான் இருந்ததும், ருப்பதும் பாசச்சுமையில்...என்றும் எல்லோருடனும்!

கோலூரின் 'நம்பிக்கை' நாடகத்தில் கோலூராக வடமிட்டவர் திரு. ஜோர்ஜ் சந்திரசேகரன். அந்த நாடகம் நடந்தபோது கோலூரும் வந்திருந்தார். அவர் முன்னாலே நடிகர் கோலூருக்கு மேக்கப் போடப்பட்டது.

இறுதியில் சிலர் நாடகத்தை ரசித்துவிட்டு தனித் தனியாக நின்ற டாக்டர் கோலூரையும், நடிகர் கோலூரையும் கண்டுகொள்ள முடியாமல் தடுமாறியபடி பாராட்டிச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்தவேளை டாக்டர் கோலூரைப் பார்க்க வந்த அவரது நெருங்கிய நண்பரிடம், கோலூரை அழைத்துச் சென்று தனியாகச் சந்திக்கச் செய்தேன். [illegible] ஆள்மாறாட்டத்தினுல் நான் கோலூராக நடிக்க [illegible] அழைத்துவந்துவிட்டார்களாம். அதனால் நடந்த [illegible]

www.padippakam.com

1993 தமிழன்

# நீ தமிழ் அரங்கம்





## நடிக்கும் போது மரணமாவதைக் கண்ட மகள் வீறிட்டு அழுத சம்பவம் மறக்க முடியாத நிகழ்ச்சி

"முகத்தார் வீடு" ஜேசுரட்ணம், ஈழத்தின் பழம் பெரும் கலைஞர்களுள் ஒருவர், பல்லாண்டு காலம் இலங்கை வானொலியில், கிராமிய மட்டத்தில், நூற்றுக்கணக்கான நாடகங்களை, குறிப்பாக, "முகத்தார் வீடு", "கதம்பம்" போன்ற நிகழ்ச்சிகளை எழுதி, நடித்து, இன்றும் பல்லாயிரக்கணக்கான வானொலி ரசிகர்களின் நெஞ்சில் நிறைந்திருப்பவர், மண்வாசனை நிரம்பிய மேடை நாடகங்களை எழுதியும், நடித்தும், ஒரு குணசித்திர நடிகராக, மக்கள் மத்தியில் நிலைத்திருப்பதோடு, ஓர் திரைப்படக் கலைஞராகவும் உயர்ந்து, 1979ம் ஆண்டின் திரைப்பட விழாவில், ஜனாதிபதி பரிசினைப் பெற்றுள்ள ஜேசுரட்ணத்தை தமிழன் நிர்வாகி கே.ஜே.பாக்கியராஜா சந்தித்து அவரது அனுபவங்கள் பற்றிய பல தகவல்களை இங்கு திரட்டித் தருகிறார்.

அண்மையில்தான் பாரிஸ் வந்து சேர்ந்த ஜேசுரட்ணம் அவர்களை ஐரோப்பிய வாசகர்களுக்கு மதிப்புடன் அறிமுகம் செய்வதில் தமிழன் பூரிப்படைகிறான். (-ஆர்)

## பாரிஸ் வந்துள்ள முகத்தார்வீடு புகழ் ஜேசுரட்ணத்துடன் ஒரு சந்திப்பு

சந்தித்து எழுதுபவர்: கே.ஜே.பாக்கியராஜா

### 286 வாரங்கள் வானொலியில் "முகத்தார் வீடு"



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம்

மனத்தினால் உயர்ந்த செல்வர்
கலைத் திறத்தினால் சிறந்த முகத்தார்
இன்முகத்தினால் நிறைந்த அன்பர்
நகைச்சுவையினால் தழுவும் கலைஞர்
தமிழ் குலத்தினால் போற்றும் நடிகர்
கவிக்கீற்றினால் கீத இசைக் கீர்த்தியர்
சக்தியினால் மண்புகழ் சேர்த்தவர்
தமிழினால் பண்புயர் மிக்கவர்
நட்பினால் நல்வழி படைத்தவர்
கலைஞரால் தன்வழிதொடார் நிறுத்தவர்
காலத்தால் உயர்ந்தவர் நிற்கின்றார்
ஞாலத்தினில் முகத்தார் உயர்ந்தோர்
வாழ்க வாழ்க வாழ்த்திடும்...
**பாரிஸ் றோயல் சிற்றுண்டிச் சாலை**


**அன்பான வரவேற்புக்கு பாரிஸ்**

**றோயல் சிற்றுண்டிச் சாலை**

**சிறந்த உணவு வகைகள் - விசேட வைபவங்களுக்கான ஓடர்கள்**
**அனைத்தையும் சிறந்த முறையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

**Royal Snack Bar**

58, rue Louis Blanc - 75010 Paris

**Tél.: 01 40 36 41 21**

Mo: La Chapelle




படிப்பகம்

www.padippakam.com













படிப்பகம்

கலைமாமணி முகத்தார் ஜேசுரட்ணம் இன்னும் பல விருதுகள் எமது வாழ்த்துக்கள்

பாரிஸ் மாநகரில் பலசரக்குப் பொருட்களின் களஞ்சியம்

# காயத்திரி

இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள்,
பத்திரிகைகள், சஞ்சிகைகள், குளிர்பானங்கள், மதுபானங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

210, rue du fg. St-Denis, 75010 Paris
Mo: La Chapelle ou Gare du Nord
Tél: 01 42 09 22 43  Fax: 01 46 07 90 34



எங்கள் அன்பு முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

# மோகன் ஜுவல்லறி மாட்

தரமான தங்க நகைத் தெரிவுகளுக்கு
பாரிஸ் மாநகரில் மக்கள் கவர்ந்தவர்கள்

**MOHAN JEWELERY MART**

201, rue du Fbg. St.Denis, 75010 Paris
M°: La Chapelle
Tél. : 01 42 05 65 26 - FAX: 01 42 05 65 79

www.padippakam.com

கலைமாமணி யேசுரட்ணம் அவர்களை வாழ்த்தும் விழா சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

# குமரர்ஸ் செரப்

மங்கையர்களின் நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்



## KUMARS TRAADE CENTER

193, Rue du fg St Denis
M°: Gare du Nord
Tél. : 01 42 05 41 36

## KUMARS SHOP

80, Bld Barbes, 75018 Paris
M°: Marcadet Poissoniers
Tél. : 01 42 59 35 10 - FAX: 01 42 59 35 00

படிப்பகம்

www.padippakam.com




கலைமாணி யேசுறட்ணம்
அவர்களை வாழ்த்துகின்றோம்.

சாட் சலூன்
CHART SALOON

28, rue Labat, 75018 Paris
Tél: 01 42 46 97 04
M°: MARCADET POSSONNIERS

சிறப்பான சிகையலங்காரம்
40 பிராங் மட்டுமே

65, Passage Brady, 75010 Paris
Tél: 01 42 46 97 04
M°: CHATEAU D'EAU

அன்புக்கலைஞர் முகத்தார் யேசுறட்ணம்
அவர்களை வாழ்த்துகின்றோம்.

M
MALA

மலிவுக்கு மறு பெயர் மாலா

22, rue Labat, 75018 Paris
Tel: 01 42 62 01 23
M°:Marcadet Poissonniers

88-90, Passage Brady,
75010Paris
Tel: 01 42 46 26 79
M°:Chateau d'Eau

2, Place Roger Salengro
95100, Garges les Gonesse
Tel: 01 39 93 93 48
RER: Garges Sarcelles

ஜப்னா இறைச்சிக் கடை

முகத்தார் யேசுறட்ணம் அவர்களை
கௌரவிக்கும் இவ் விழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

உங்கள் தேவைக்கு ஏற்றவாறு
இறைச்சி வகைகளின் தெரிவுகள்
எம்மிடம்



JAFFNA BOUCHRIE
70, RUE LOUIS BLANC
75010 PARIS
Tél: 0140 35 46 47


படிப்பகம்

கலைமாமணி முகத்தார் அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்



சபரியய்யப்பன் மளிகை ஸ்தாபனம்

தரமான மளிகைப் பொருட்களை
மலிவாக, மிகச்சிறந்த வரவேற்போடு
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

**SABARIYAPPAN**

Alimentation Generale

69, rue Louis Blanc
75010 Paris

**Tél et Fax: 01 42 05 47 12**

M°: La chapelle

www.padippakam.com




கலைமாமணி முகத்தாருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# அம்பிகை நகைமாளிகை

**Pro. S. Selvakumar**

நகைத்தொழிலில் பல்லாண்டு அனுவம் மிக்கவரின் கைவண்ணத்தில் உங்கள் தங்க நகைத் தேவைகளை எண்ணம்போல் செய்து பெற்றுக்கொள்ள

## AMBIHAI JEWELLERY

16, rue Perdonnet, 75010 Paris

**Tél.: 01 44 72 01 89**

Mo: La Chapelle / Gare du Nord



நிறைவான கலைஞன் முகத்தாருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# JAFFNA AUTO ECOLE

## தமிழ் சாரதிகள் பயிற்சி நிலையம்



195, rue du Fbg. St. Denis, 75010 Paris

**Tél.: 01 42 05 88 99**

M°: Gare du Nord / La Chapelle

www.padippakam.com


எங்கள் மண் வாசனையுடன் வளமுடன் திகழும்
முதுபெரும் கலைஞரை மனதார வாழ்த்துகிறோம்.



# NEW CITY BAKE HOUSE

மங்கள வைபவங்களுக்கான சகல கேக் வகைகளும் குறித்த நேரத்தில்
உங்கள் விழா மண்டபத்தில் கொண்டுவந்து தரப்படும்.

றோஸ் பாண், அச்சுப்பாண், மீன் பாண் பணிஸ் வகைகளும் விற்பனைக்கு உண்டு
தவிர ஓடருக்கும் செய்து தரப்படும்.



**நியூ சிற்றி பேக்கறி**

20, Avenue carnot
Neuilly Plaissance
**Tél: 01 49 44 00 90**

# தமிழாலயம்

முகத்தார் யேசுரட்ணம் அவர்களின் கலைத்தொண்டு சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**அச்சகம்**

**வீடியோ**



**மொழி பெயர்ப்பு**

**EDTPD THAMILALAYAM**
39, Bld. de la chapelle, 75010 Paris
**Tél: 01 42 05 71 49 Fax: 01 42 05 71 39**


படிப்பகம்

www.padippakam.com

# விடைபெறுமுன்.......

கலைவாழ்வை தன் உயிர்வாழ்வாக வாழ்ந்து கொண்டிருப்பவர்தான்....... இவர்.....
எத்தனை விருதுகள் இவரிடம் சேர்ந்தன.
இருந்தாலும் ....... அன்றுபோல் தான் இன்றும்.
கலைமாமணி விருதும் இவரைச் சேர்ந்த இன்று.
ஆனால் அவர்.... அன்றுபோல் தான் இன்றும்.....
எப்படி?
தன்னிலை மாறாத கலைஞர் இவர்!
அவரிடம் தோற்காதவர்கள் யார்......?
மரணமே அவரிடம் தோற்றது என்றால்
மனிதர்கள் நாம் எம்மாத்திரம்.....
அவரை யாராலும் விலத்தி வைக்க முடியாது.
எல்லாரும் அவரைத் தேடுவர்..........
எல்லாரும் அவருக்கும் தேவை.........
எல்லோருக்கும் அவர் தேவை...........
அவர்தான் புன் சிரிப்பால் இழுத்துவிடும் முகத்தார் ஜேசுரட்ணம்.
அவருக்கு இன்று கலைமாமணி விருது வென்ற கௌரவிப்பு விழா, பாராட்டு விழா
அதற்கு இந்த மலர் முடிசூட்டும்
இவரால் இந்த மலர் பெருமை பெறும்
அத்தகைய இந்த மலர்....
வெளிவர தன் ஈகை உள்ளத்தால் கரம் கொடுத்த
குமார் சொப் நிறுவன உரிமையாளரும் றேடியோ ஆசியா இயக்குனருமான தவவிநாயகம் சந்திரகுமார் அவர்களை எங்கள் நெஞ்சங்கள் நினைக்கும்.

கேட்டவுடன் உதவி செய்யும் மனங்கொண்ட தமிழாலயம் அதிபர், ஈழநாடு இயக்குனர் எஸ். பாலச்சந்திரன் அவர்களையும் நினைத்துப் பார்க்கிறோம்.

இந்த மலருக்கு தேவையான ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்த மலருக்கு விளம்பரம் தந்துதவிய வர்த்தக நிறுவனங்களுக்கும் எமது நன்றிகள் பல.

இந்த மலரை அழகுறப் பதிப்பித்த ஸ்ரீ பாரதி அச்சகத்தினருக்கும் இந்த நன்றிகள் என்றும் உண்டு.

இந்த விழாவிற்கு தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் பிரான்சுக் கிளைப் பிரதிநிதி திரு. ந. இளங்கோ அவர்களுக்கும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் திரு.சிவனடியான் ஸ்ரீபதி அவர்களுக்கும் இந்த மலரை வெளியிட்டு வைக்கும் பாரிஸ் தமிழர் கல்வி நிலைய காப்பாளர் திரு. சி. காராளப்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றிகள் என்றும் உண்டு.

இந்த விழா தொடர்பாக இலவச விளம்பரம் செய்து தந்த ரஜிந்தாஸ் அழுத்தகத்தினருக்கும் எமது நன்றிகள்.

இவ்விழாவில் இன்னிசை தந்து மகிழவைக்கும் இளையநிலா குழுவுக்கும், ஒலி வடிவம் தரும் அருள் சுவுண்ட உரிமையாளருக்கும், போக்குவரத்து வசதிகளைத் தந்து எமது இனியவர்களான திரு. விக்ரர், திரு. பாஸ்கரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் என்றும் உண்டு.

இந்த விழாவை சிறப்புற நடாத்தி முடிக்க உதவிய அனைத்து கலைஞர்களுக்கும் கரங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

எம் நன்றி ஏற்று கலைமாமணி முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களை வாழ்த்துங்கள்.

**செயலர்**
பாரிஸ் கலைஞர்கள் விழா குழு சார்பாக
*15.03.1998*



படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com

# கலைமாமணி முகத்தார்
# எஸ். ஜேசுறட்ணம்



**தந்தை: அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை**
**தாயார்: சந்தியாப்பிள்ளை மரியப்பிள்ளை**
**பிறந்த திகதி: 26.12.1931**
**பிறந்த இடம்: இளவாலை, தமிழீழம்**

யாழ்ப்பாணத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் படித்தபின் 33 வருடங்களாக அரச உத்தியோகத்தில் உதவிக் கணக்காளராகவும், நிர்வாகப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து, சிங்கள மொழி சட்ட விதிகளுக்கமைய சிங்களம் படிக்காது தனது பதவியில் இருந்து தானாக விலகிக் கொண்டார்.

1951ல் மேரி அயரின் என்பவரைக் கைப்பிடித்தார். இவரது இனிய இல்லற வாழ்க்கையின் மூலம் 5 பிள்ளைகளையும் 10 பேரப்பிள்ளைகளையும் கொண்டுள்ளார்.

இவரது பள்ளிக் காலத்தில் கலைத்துறையில் 1945ல் நுழைந்து பல நாடகங்களில் நடித்து தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அதன்பின், 1948ல் இருந்து தனது [illegible] நேரத்துடன் தனது கலைச் சேவைக் [illegible] தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

[illegible] ஆரம்பகால நாடகங்கள் பெரும்பாலும் [illegible] நாடகங்களாக இருந்த போதிலும், பின் தமிழில் [illegible]படைப்பைத் தொடர்ந்து கொண்டார்.

[illegible] கலை வாழ்க்கையில் 19 வருடங்கள் இலங்கை [illegible]லியில் பகுதிநேரக் கலைஞனாகப் பணிபுரிந்தார். வாடைக்காற்று திரைப்படத்தில் நடித்ததன் மூலம் 1979ல் ஜனாதிபதி விருதினைப் பெற்றார்.

வானொலி மூலம் இவரின் முகத்தார் வீடு என்னும் நாடகம் 5 வருடங்களாக இடம்பெற்றது. இதனால் முகத்தார் என்னும் பெயர் இவரது இயற்பெயராக மாறியது.

1985ல் தவிர்க்க முடியாத காரணங்களால் ஈழத்தை விட்டு தமிழ்நாட்டில் குடியேறினார். அங்கும் இவரது பொதுப்பணி, கலைப்பணி தொடர்ந்தது.

1993ல் பிரான்சில் கலைப்பயணத்தைத் தொடர்ந்து ஐரோப்பிய அனைத்து நாடுகளிலும் பல நாடகங்களை மேடையேற்றினார்.

பாரிசில் உருவான பெரும்பாலான திரைப் படங்களில் நடித்து முத்திரை பதித்தார்.

இன்று இவரது கலைச்சேவையை ஐரோப்பாவின் முதல் 24 மணிச் சேவையை ஆரம்பித்த றேடியோ ஆசியா, தொலைக்காட்சி (TRT) பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அத்துடன் IBC வானொலியும் இவரது சேவையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

இவரது குரல் ஒலிக்காத நாட்கள் இல்லை.

படிப்பகம்

ஸ்ரீ பாரதி அச்சகம், பாரிஸ் - 01 42 05 46 04